விலை சதம் 70 ★ ★ பக்கங்கள் – 10

அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
சுவை குன்றாமல்
உடனுக்குடன் அரைத்த
கோப்பியை
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்!
அண்ணா கோப்பிக்கடை
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

திருப்திகரமான சலவைக்கும்,
பளிச்சிடும் வெண்மைக்கும்
மில்க்வைற் நீலசோப்
வாங்கி உபயோகியுங்கள்.
மேலுறைகளை அனுப்பி
பெறுமதி வாய்ந்த
பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 22 கார்த்திகை 15 முஹறம் 21 ஞாயிற்றுக்கிழமை (30—11—80) இதழ் 291

# தமிழ் மொழிபெயர்ப்பு வழங்க நீதிபதி உத்தரவு

# யாழ். நீதிமன்றத்தில் சிங்கள வரைபடத்திற்கு ஆட்சேபனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேலதிக நீதி மன்றத்தில் நடந்த வழக்கொன்றில் சிங்கள மொழியில் தாக்கல்செய்யப்பட்ட வரைபடத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையை நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

மண்டைதீவுக் கொலைமுயற்சி வழக்கில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடம் சிங்கள மொழியிலேயே தயாரிக்கப்பட்டிருந்தது. இதனை எதிரி சார்பில் ஆஜரான சட்[illegible]

(10-ம் பக்கம் பார்க்க)

## பிறிமா ஆலையை ஜனாதிபதி இன்று திறந்துவைப்பார்

(திருகோணமலை)

திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள பிறிமா மா ஆலையை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று மாலை திறந்துவைப்பார்.

சிங்கப்பூர் பிறிமா நிறுவனத்தின் உதவியுடன் நிறுவப்பட்ட இவ்வாலை, ஆசியாவிலேயே மிகப் பெரிய மா ஆலையாகும். (கு)

## யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறை இருப்பது உண்மையே

### கல்வி அமைச்சர் ஒப்புக்கொள்கிறார்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறை இருப்பது உண்மையே என கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்த வேறு சில விபரங்கள் வருமாறு: [illegible] பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், 2,533 பொது ஆசிரியர்களும், 159 பயிற்றப்படாத ஆசிரியர்களும், 339 ஜி. சி. ஈ. சாதாரணதர ஆசிரியர்களும், 132 ஜி. சி. ஈ. உயர்தர ஆசிரியர்களும் இருக்கின்றனர். 902 ஆங்கில ஆசிரியர்கள் தேவை. அதேவேளையில் 539 பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களே இருக்கிறார்கள். இவர்களுடன் 92 பயிற்றப்படாத ஆசிரியர்களும், 45 ஜி. சி. ஈ. (சா) ஆசிரியர்களும், ஜி. சி. ஈ. (உயர்) ஆசிரியர்களும் ஆங்கிலம் கற்பிக்கின்றனர்.

374 பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்கள் தேவை. 255 பேர் மட்டுமே உள்ளனர் 40 ஜி. சி. ஈ. (சா) ஆசிரியர்

(10-ம் பக்கம் பார்க்க)

## அவர் வழியில்...

மனிதன் பிறந்தான்-இருந்தான்-மறைந்தான்.

உலகில் தோன்றுகின்ற மனிதர்களில் பெரும்பாலானவர்கள் இந்தப்பட்டியலுக்குள் அடங்கிவிடுகிறார்கள். இவர்களே சாதாரண மனிதர்கள்!

மனிதன் பிறந்தான்-செயற்கரிய செயல்களைப் புரிந்தான்-மங்காப்புகழோடு மறைந்தான்!

இந்த நிலை ஒருசிலருக்கே வாய்க்கப்பெறுகின்றது. அவ்வாறானவர்களின் புகழ், இனம்-மதம்-நாடு என்ற குறுகிய வட்டத்துக்குள் நின்றுவிடாது, அதற்கு அப்பாலும் ஒளிவீசிப் பிரகாசிக்கும். அந்தப் பிரகாசத்தின்வாயிலாக அவர்சார்ந்திருந்தசமுதாயமும் துலக்கம் பெறுவதுண்டு.

இவ்வாறு செயற்கரிய செயல்புரிந்த பெருமக்கள் வரிசையில், இலங்கைத் தமிழர் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் சேர். பொன். இராமநாதன் முக்கிய இடத்தினை வகிக்கின்றார் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

அப்பெரியார் மறைந்து50 ஆண்டுகள் நிறைவெய்தும் இவ்வேளையில் அவரை நன்றியுடன் நினைந்து அஞ்சலி செலுத்துவதற்குத் தமிழினம் கடமைப்பட்டுள்ளது.

ஆனால் அத்துடன் நம் பணி முடிந்துவிடுமா?

சேர். இராமநாதன் காட்டிச்சென்ற வழியில் மேலும் சில படிகளையாகுதல் கடந்து முன்னேறுவதற்குத் நாம் திடசங்கற்பம் கொள்ள வேண்டாமா?

சிந்தித்து செயல்படுவோம்!

பொதுமக்களுக்கு சில்லறையாக விற்கவேண்டிய

# அரிசியை மொத்தமாக தனியாருக்கு விற்றார்களாம்!

## இருவர் காவலில், 15 மூடை அரிசிமீட்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கு சில்லறையாகக் கட்டுப்பாட்டு விலையில் விற்கப்பட வேண்டிய அரிசியைத் தனியார் கடைக்கு மூடைக் கணக்கில் விற்கப்பட்டதாம்.

யாழ்ப்பாணம் சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் சில்லறைக் கடையொன்றில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு விற்கப்பட்டதாகக் கூறப்படும் 15 மூடை குத்தரிசியைப் பொலிசார் கைப்பற்றியதுடன் இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவரையும் காவலில் வைத்துள்ளனர்.

தலா 5 கிலோ வீதம் கட்டுப்பாட்டுவிலையில் பொது மக்களுக்கு விற்கப்படவேண்டிய 15 மூடை குத்தரிசி தனியார் கடையொன்றுக்கு மொத்தமாக விற்பனை செய்யப்பட்டிருப்பதை பொலிசார் கண்டுபிடித்ததாகவும் அம்மூடைகள் அனைத்தையும் கைப்பற்றியதுடன் இது தொடர்பாக இருவரைக் கைது செய்து காவலில் வைத்திருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர். இவ்வரிசி மூடைகள் யாவும் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தனியார் கடை ஒன்றிலிருந்து கைப்பற்றப்பட்டன. இதை அடுத்து அரிசி விற்பனையில் மோசடி செய்ததாக சந்தேகத்தின் பேரில் மேற்படி சில்லறை விற்பனை நிலைய பிரதிநிதி நிர்மலநாதன் என்பவரையும் [illegible] மூடைகளை வி[illegible]

[illegible] தற்கு உதவியாக இருந்த[illegible] என்ற சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சி நெல் சந்தைப்படுத்தும் சபை அதிகாரி எஸ். சோமசுந்தரம் என்பவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

பொலிசாரால் கைப்பற்றப்பட்ட அரிசி மூடைகள் யாழ் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

பொது மக்களுக்கு வழங்குவதற்கென நெல் சந்தைப்படுத்தும் சபையால் மேற்படி சில்லறை விற்பனை நிலையத்திற்கு வழங்கப்பட்டு வரும் அரிசி மூடைகளில் ஒரு பகுதி மட்டுமே பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாகவும், ஏனைய அரிசி மூடைகள் இரவோடு இரவாக தனியார்கடைகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு பொது மக்கள் புகார் செய்துள்ளனர் இப்புகார் சம்பந்தமாக விசாரணை நடாத்தும் படி யாழ். அரசாங்க அதிபர் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். திருச்சிற்றம்பலம் இது சம்பந்தமாகப் புலன் விசாரணையில் ஈடுபட்டபோது சம்பவ தினமும் மேற்படி விற்பனை நிலையத்தால் தனியார் கடை ஒன்[illegible] [illegible] செல்லப்படுவதாகவும் தெரிய வந்துள்ளதையடுத்து

(10-ம் பக்கம் பார்க்க)

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3.
தொலைபேசி : 89190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு: மோசடி வழக்கில் சந்தேகநபருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி 3 இளைஞர்களிடமிருந்து பண மோசடி செய்ததாகக் கூறப்படும் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். வீரமாகாளி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த செல்லத்துரை சிவராசா என்பவரே இவ்வாறு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவராவார்.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களிடம் தலா 10 ஆயிரம் ரூபாவும் ஒருவரிடம் 8 ஆயிரம் ரூபாவும் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு வேலை பெற்றுக் கொடுக்காது மோசடி செய்துள்ளதாக மேற்படி மூன்று இளைஞர்களாலும் யாழ். விசேட குற்றத்தடுப்பு புலனாய்வுப் பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி புகாரையடுத்து புலன் விசாரணையில் ஈடுபட்ட கான்ஸ்டபிள் திரு. வி. எஸ். தர்மலிங்கம் சந்தேக நபருக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவர் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

மீண்டும் அடுத்த தவணையின் போது சந்தேகநபர் யாழ். நீதி மன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபர் 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார் (செ)

## இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சிவாச்சிரம 20வது ஆண்டு நிறைவுவிழாவும், 'திருமுறைத் திரட்டும் பக்திப்பாடல்களும்' நூல் வெளியீட்டு விழாவும் இன்று காலை மேற்படி ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா, பண்டிதைசெல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஊர்காவற்றுறை நீதவான் க. திலகன், கலாநிதி வே. இராமகிருஷ்ணன் ஆகியோரும் வேறு பலரும் உரையாற்றுவர்.

0 0 0

யாழ். வானியல் சழகத்தின் பொதுக்கூட்டம், இன்று மாலை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய பொதுக்கூட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் சழகப் புவியியல் பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை சிறப்புரையாற்றுவார்.

## நாடு திரும்பினர்

(கொழும்பு)

சங்கைக்குரிய குருடாவா, சுமார் இரண்டரைவருடங்கள் வெளிநாட்டில் ஆத்மீகபோதனையை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் நாடு திரும்பியுள்ளார்.

குருபாவாவின் ஆச்சிரமத் தலைமை நிலையம் பிலடெல்பியாவிலும் அமெரிக்காவின் முக்கிய தலைநகரங்களில் பதினேழு கிளைகளும் நிறுவப்பட்டுள்ளன

அமெரிக்காவில் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட குருபாவாவின் ''டிவைன்லியூமினஸ் விஸ்டம்'' எனும் நூல ஆயிரக்கணக்கில் விற்பனைசெய்யப்பட்டுள்ளதுடன் நோர்வே, சுவீடன் போன்றநாடுகளிலும் விற்பனையாகியுள்ளன. இந்நூலுக்கேற்பட்டுள்ள கிராக்கியினால் மூன்றாவது பதிப்பும் அச்சாகியுள்ளன.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அமரர் சேர். பொன்னம்பலம் இராமநாதன்; அமரர் மு. திருச்செல்வம் ஆகியோரின் நினைவுதினக் கருத்தரங்குகள் இன்று மாலை டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கத்தின் வாஸஸ் தலத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சுரேந்திரன்; எம். [illegible]த்திலிங்கம், கோவை [illegible]சன், பொன். பூலோகசிங்கம் ஆகியோர் உரையாற்றுவார்.

## வாடகைக்கு

ரியூட்டரி வகுப்புக்கள் அல்லது சிறுவர் பாடசாலை வகுப்புக்கள் நடாத்துவதற்கு சகல வசதிகளும் அமைந்த வீடும் வளவும் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. இவ்வீடு பன்னாலை பிரதான வீதியில் தெல்லிப்பளைச் சந்திக்கும், ஆரிய கல்லூரிக்கும் அருகாமையில் அமைந்துள்ளது. தேவையானோர் உடனடியாகத் தொடர்புகொள்க: இரா. அருள்நேசன், விக்கினேஸ்வரா வீதி, சங்கானை கிழக்கு. 7431


மீண்டும்! இன்று!

[illegible]க் கல்லூரி

தயாரித்தளிக்கும்

சி. [illegible]குருவின்

"சங்காரம்"

30-11-80 ஞாயிறு மாலை 6-45 மணி.

வீரசிங்கம் மண்டபம்

ரிக்கற்: ரூபா 10, 5, 3.

[15-11-80-ல் பார்வையிடாத ரசிகர் அவை உறுப்பினர்கள் இம்முறை அனுமதிக்கப்படுவர். தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை]

7463


## பதவி வெற்றிடம்

சங்க பேக்கரியில் தற்காலிக தலைமை பேக்கர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. கீழ்க்குறிக்கப்படும் விபரங்களுக்கு அமைய விரும்புவோர் 10-12-80 திகதிக்குள் சுயது விண்ணப்பத்தினை பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

சம்பளத்திட்டம் 350 — 545 —+ விசேட உரிய படிகள்.
12.50 x 10 — 17.50 x 4

ஆதனப்பிணை ரூபா 2000/-
உரொக்கப் பிணை ரூபா 1750/-

தகமை:

அ) 5ம் வகுப்பு சித்தியுடன் 10 வருட பேக்கர் அனுபவமும் இதில் தலைமை பேக்கராக 3 வருடமும் அல்லது உதவித் தலைமைப் பேக்கராக 5 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

இத்துடன்

ஆ) கேக், பிஸ்கட், இனிப்புவகைகள் தயாரிப்பதில் 5வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது: 25 — 40

பண்டத்தரிப்பு பரிஷ். ப. நோ, கூ. சங்கம்
பதில் பொதுமுகாமையாளர்.

திகதி: 27-11-1980.

7475

## முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி

நா. மலர்விழி



மலர்வு 16-4-62 உதிர்வு 13-12:79

ஓடி எங்கு சென்றாய் ஓயாமல் அழுகின்றோம்.

அன்புடன்
ஐயா, அண்ணாமார்,
அம்மா, அக்காமார்.
கரவெட்டி. (7478)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய நிலையில்உள்ள R 60 சிசில் குளிர்சாதனப் பெட்டியும் (ஸ்ராண்டுடன்) நாஷனல் பனசோனிக் 5310 ரேடியோ கசற்றும் உரிமையாளர் வெளிநாடு செல்வதால் விற்பனைக்குண்டு. தொடர்பு: 48 A, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; யாழ்ப்பாணம். 317. (7467)

3 ஸ்ரீ தொடக்கம் 11 ஸ்ரீ வரையுள்ள மொறிஸ் ஒக்ஸ்போட், மொறிஸ் மைனர், வோக்ஸ்வகன் கார்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு வாகனம் மாற்றவும், பினான்ஸ் வசதிகளும் செய்து கொடுக்கப்படும். பார்வையிடும் நாட்கள் சனி, ஞாயிறு. விபரங்களுக்கு: 81/2, மணிக்கூட்டுவீதி, (பெருமாள் கோவிலடி), யாழ்ப்பாணம். (7476)

மல்லாகம் சந்தியிலிருந்து 100 யாருக்குள் காங்கேசன்துறை வீதியில் எல்லா வசதிகளும் கொண்ட ஆறு அறை வீடும் காணி 6 பரப்பும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் நந்தாவில், கொக்குவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ச. சிவசுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளவும். 7443

48 பரப்புக் காணி நீர்வேலி சரந்தன் வீதியில் அமைந்துள்ளது. பலாலி வீதிக்கு அண்மையில் உள்ளது. S. நாகலிங்கம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம். 7457

பரந்தன்-முல்லைத்தீவு றோட் ஓரமாக 9வது மைல் கட்டை அருகில் பதினொரு ஏக்கர் காணி முற்றாக வேலிபோடப்பட்டது. பகுதி மா, எலுமிச்சை, வாழை, தென்னை பயிரிடப்பட்டு நல்ல கிணற்றுடன் உண்டு. விளம்பரதாரர், 48 A, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: யாழ்ப்பாணம் 317. (7466)

இருபாலை சந்திக்கருகாமையில் 18 பரப்புக் காணி வரும்படியுடன். தொடர்பு: சட்டத்தரணி திரு. செந்தில்நாதன், 167, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 7439

HONDA C D 125 82 ஸ்ரீ 5000 தொடர் இலக்கமுள்ள மோட்டார் சைக்கிள் சீரான நிலையில் நியாயமான விலைக்கு விற்பனைக்குண்டு. நம். 1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை (கண்டி றோட் றெயில் கேட்டுக்கு அருகாமை) சுண்டிக்குளி. 7459

இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. 66, இந்துக் கல்லூரி ஒழுங்கை. யாழ்ப்பாணம். 7469

இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அண்ணா பாம் இணுவில். 7480

## விற்பனைக்கு

ஒஸ்ரின் ஜீப் இலக்கம் 5 ஸ்ரீ 1909 செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை பொருளாளர், ஆதீன அலுவலகம், வட்டுக்கோட்டைஎன்ற முகவரியில் தொடர்புகொள்ளவும். 7477

B. S. A. மோட்டார் சைக்கிள் 3.5 H. P. இரண்டாவது உரிமையாளர். பார்வையிடும் இடம்: ராம்சன்ஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், 19, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 7479

எமது ஸ்தாபனத்தின் மாட்டுத்தொழுவத்தில் எருக்குவியல் விற்பனைக்குண்டு. விலையைப் பார்வையிட்டு தீர்மானித்துக் கொள்ளலாம். ஸ்ரீ தாமோதர விலாஸ், 239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 7065. (7482)

எங்களிடம் நல்ல நிலையில் பாவிக்கக்கூடிய என்லாச்சர் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். ஜோதீஸ்வரா இஸ்ரூடியோ, நெல்லியடி. 7483

பருத்தித்துறையிலிருந்து 5 மைல் தூரத்தில் வலிகண்டியிலும் குடத்தனையிலும் 400 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. விலை விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்: 195, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 7485

**WANTED**

Teacher - B. Sc. with Maths to teach in A, L. Classes. Clerk - Female. Able to type in Tamil and English. Knowledge of Accounts preferable. Apply with testimonials and reference to: Principal, Holy Family Convent, Jaffna. 7481

## தேவை

யாழ். ஏடாநாட்டில் சடந்சரை ஓரமாக வீட்டுடனோ வீடு இல்லாமலோ காணி விலைக்குத் தேவை. குற்றமற்ற உறுதியாக இருத்தல்வேண்டும் விஸ்தீரணம், விலை விபரங்களை குறிப்பிட்டு எழுதவும். மனோகரன், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7605 (7468)

எமது ஸ்தாபனத்தில்தையல் வேலை குறிப்பாக பெண்களின் உடைகள் வெட்டித் தைக்கக்கூடிய ஒரு பெண் தையலாளர் தேவை. தேர்ச்சி அனுபவம், எதிர்பார்க்கும் வேதனம் முதலியவற்றைக் குறிப்பிட்டு 8-12-80 க்கு இடையில் விண்ணப்பிக்கவும், வசந்தா வஸ்திராலயம், 20, மேல்மாடி மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம். 7462


வருகின்றது நத்தார்! புத்தாண்டு!!

உங்கள் தேவை எதுவானாலும் எம்மை நாடுங்கள்!

கேக் சாமான்கள், விளையாட்டுப் பொருட்கள், அலங்காரங்கள், வெளிநாட்டு, உள்நாட்டு இனிப்பு, பிஸ்கட், அன்பளிப்புப் பொருட்கள், வாழ்த்து மடல்கள்.

எவை வேண்டுமோ அத்தனையும் கிடைக்குமிடம்:

பெற்ரு டிஸ்ரிபியூட்டர்ஸ்,

61, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(இது. [illegible] சிறாப் நிறுவனத்தின் கிளை.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொர்க்கமும் நரகமும்

சுமதியின் திருமண எழுத்துக்கு ஒருகிழமை இருக்கும்போது அந்தக் கடிதம் வந்தது. அதை அவளுடைய பாடசாலைத் தோழி மல்லிகா எழுதியிருந்தாள். சுமதிக்குப் பேசி வைத்திருக்கும் மாப்பிள்ளை மல்லிகாவுடைய கணவனின் ஊரைச்சேர்ந்தவன். அதனால் தன்னுடைய வருங்காலக் கணவனைப்பற்றி விசாரித்து எழுதும்படி அவள்கேட்டிருந்தாள். அதற்குரிய பதிலைத்தான் மல்லிகா எழுதியிருப்பாள் என்ற ஆவலில் கடிதத்தை பிரித்துப் படித்தாள்.

''அன்புள்ள சுமதிக்கு, நான் இக்கடிதத்தை எழுதுவதையிட்டு மிகுந்த வேதனைப்படுகிறேன். ஆனாலும் உண்மையை எழுதாமல் விட என்னால் முடியவில்லை. உனக்குப் பேசிவைத்திருக்கும் மாப்பிள்ளையை அவருக்குத் தெரியுமாம். ஊரிலே கழிச்சுவிட்ட பேர்வழியாம். அவனுக்கு எத்தனையோ சம்பந்தங்கள் பேசியும் குழம்பிப்போய்விட்டனவாம். அதனால் தூர இடமாகப் பார்த்து உங்களிடம் வந்திருக்கிறார்கள். முடிந்தால் இந்தத் திருமணப்பேச்சை குழப்பிவிடு இல்லையோ இறைவன் விட்டவழி.''

சுமதியின் மண்டை விறைத்தது. அவளுடைய இதயத்தை யாரோ கசக்கிப்பிழிவது போலிருந்தது. பிறந்த வீட்டில் கஷ்டங்களை அனுபவிக்கும்போது புகுந்த வீட்டில் சுகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தவளை அந்தக் கடிதம் குழப்பிவிட்டது.

''கடவுளே! ஏழைகள் என்றால் பாவப்பட்ட ஜென்மங்களா? அவர்கள் மீள்வதற்கு வழியில்லையா?''

வீட்டிலே அவளுடைய திருமண எழுத்துக்கு ஒரே ஆரவாரம். அவளுடைய தகப்பன் தியாகு தனக்குத் தெரிந்த இடங்களில் எல்லாம் பணத்தைப் புரட்டிக்கொண்டிருந்தார். சுமதி தன்னுடைய வீட்டு நிலைமையை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தாள். அவளைத் தொடர்ந்து இரண்டு தங்கைகள் திருமணத்துக்காகக் காத்திருக்கிறார்கள். தகப்பனின் உழைப்போ சாப்பாட்டுக்கே போதாது. அப்படிப்பட்ட நிலைமையில் இந்தத் திருமணப் பேச்சு நின்றுபோனால் அதை அவளுடைய குடும்பம் தாங்காது, என்று அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

அவள் ஒரு முடிவுக்கும் வர முடியாமல் குழம்பினாள். அந்தக் கடிதத்தை தகப்பனுக்குக் காட்டவா அல்லது விடவா என்ற போராட்டம் பல மணித்தியாலங்கள் அவளுடைய உள்ளத்தில் இடம்பெற்றது. இறுதியில் அந்தக் கடிதத்தைப் பற்றி எவருக்கும் சொல்வதில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தாள்.

வீட்டுக்கு வருகின்ற மூத்த மருமகன் அந்தக் குடும்பத்துக்கு தந்தையைப் போன்றவன். அந்தக் குடும்பத்துச் சுமைகளில் அவனுக்கும் பங்கு உண்டு என்று சொல்வார்கள். ஆனால் தன்னுடைய வருங்காலக் கணவனே இருக்கிற சுமைகள் போதாது என்று சுமைகளைக் கூட்ட வருகிறார் என்று நினைக்கும்போது அவளுடைய இதயம் வெடித்துச் சிதறிவிடும்போலிருந்தது.

சுமதி அந்தக் கடிதத்தை பத்திரமாக தன்னுடைய உடுப்பு வைக்கும் பெட்டியில் வைத்துக்கொண்டாள். எதுவுமே நடக்காததுபோல் தன்னுடைய திருமண எழுத்துக்கு வேண்டிய ஆயத்தங்களில் ஈடுபட்டாள்.

அன்று இரவு சந்திரன் அவளுடைய வீட்டுக்கு வந்து இருந்தான். அவனைக் கண்டதும் அவளுடைய மனம் திக்கென்றது. அந்தக் கடிதம் அவளுக்குக் கிடைத்திருக்காவிட்டால் எவ்வளவு சந்தோஷத்துடன் அவனை வரவேற்று இருப்பாள்? அவள் சந்தோஷத்தை வருந்தி அழைத்துக்கொண்டு அவனை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

சந்திரன் அவளிடத்தில் ஒரு பார்சலைக்கொடுத்தான். அதை அவள் வாங்கிக்கொண்டாள். அவளை வாய்திறக்க விடாமல் மனதை ஏதோ அமுக்கிக் கொண்டிருந்தது. அதிலிருந்து விடுபட எவ்வளவோ முயற்சித்தும் அவளால் முடியவில்லை. ''என்ன சுமதி பேசாமல் இருக்கிறாய்? முகத்தில் சந்தோஷத்தைக் காணேலையே! வீட்டில் ஏதாவது பிரச்சினையா? ஏதாவது பணம் தேவை என்றால் என்னிடம் சொல்லுங்கள்.''

அந்தநேரத்தில் அவளுடைய துயரம் எல்லைமீறிப் போகவே கண்ணீர்த் துளிகள் சிதறிவிழுந்தன. அதைக்கண்ட சந்திரன் துடித்துப்போய்விட்டான். ''என்ன சுமதி இது? உனக்கு இந்தச் சம்பந்தத்தில் விருப்பமில்லையா? அல்லது யாராவது என்னைப்பற்றிக் கூடாமல் சொன்னார்களா? ......அவனுடைய குற்ற உணர்வு தனக்குச்சார்பான கேள்விகளை எழுப்பியது.

இனிமேலும் மறைப்பதில் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்துகொண்டவன் நடப்பது நடக்கட்டும் என்ற துணிவில், தான் செய்வது சரியா பிழையா என்ற தெளிவில்லாமல் அந்தக் கடிதத்தை எடுத்துவந்து அவனிடத்தில் காட்டினாள்.

கடிதத்தை வரிக்குவரி மிகவும் ஆறுதலாக அவன் வாசித்தான். அவனுடைய சிவந்த முகம் சிடீரென மாறிவிட்டது. அப்போதுதான் தான் செய்தது எவ்வளவு முட்டாள்தனம் என்பது அவளுக்குப் புரிந்தது. கடிதத்தை வாசித்து முடிந்ததும் சந்திரன் எதையோ வெறித்துப் பார்த்தபடி இருந்தான். அவனைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

''நடந்ததைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இனிமேலாவது நீங்கள் திருந்தி வாழ்ந்தால் அதுபோதும். நான் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன உங்களுக்கே வாழ்க்கைப்படவேண்டியவள். என்னுடைய குடும்பச் சூழ்நிலை அப்படியாகிவிட்டது,'' அவள் அவனுடைய காலைப்பிடித்துக் கொண்டு அழுதாள்.

அவளைத் தூக்கித் தன்னருகில் இருத்தினான். ''சுமதி, நீ மனம் திறந்து கேட்டதையிட்டு நான் உண்மையிலே சந்தோஷப்படுகிறேன். இந்தத் திருமணப்பேச்சு நின்றுபோனாலும் பரவாயில்லை. நான் உண்மையைக் கூறுகிறேன். அதை நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் அது உன்னைப்பொறுத்தது,

''சமூகம் ஒருவனைப்பற்றி ஒரு முடிவை எடுத்தால் அதை எளிதில் மாற்றிக்கொள்வதில்லை. அவன் உண்மையில் திருந்திவிட்டால்கூட அவனை நம்பாது. என்னைப்பொறுத்த வரையில் நான் தவறுகள்செய்தவன்தான், நான் செய்த தவறுகளை தட்டிக்கேட்க தாய் தந்தையர் இல்லை, என்னைப் பொறுப்பேற்றுக் கொண்ட உறவினர்கள்கூட 'ஒதுங்கிக் கொண்டார்கள்.''

''நான் செய்வதுபிழையென எனக்குத் தெரிந்தாலும் அதை தடுத்து நிறுத்த ஒரு அன்பு கொண்ட உள்ளம் இல்லை. எனக்கு வருகின்ற மனைவி என் மீது காட்டும் அனுதாபத்தினால் என்னுடைய திசைமாறிப்போன வாழ்க்கையை மீட்டுக்கொள்ளலாம் என்ற நப்பாசையிலேயே இந்தத்திருமணத்துக்கு நான் சம்மதித்தேன்.'' அவன் உணர்ச்சி வசப்பட்ட நிலையிலேயே கூறினான்.

சுமதியினுடையமுகம் அவன் கூறியதைக் கேட்டு மலர்ந்தது. திருமணத்தின்பின் கணவன் மனைவிக்கு இடையில் தோன்றும் பிரச்சினைகளை மனம்விட்டுப்பேசினால் தீர்த்துக்கொள்ளலாம் என்ற உயர்ந்த தத்துவத்தை அவள் அப்போது புரிந்துகொண்டாள்.

கந். தர்மலிங்கம்

(9-ம் பக்கம் பார்க்க)

## கடந்தவாரக் கதைகள்

ஈழத்திலே 'இன்று வரு'— மொன்றிற்குச் சராசரி மூந்நூறு கதைகளுக்கு மேல் வெளியானாலும்: வாசிப்பவர் மனதை விட்டகலாத சிறந்த இலக்கிய சிருஷ்டிகளை அறிமுகப்படுத்தும் சீரிய கதைகளை விரல் மடித்து எண்ணிவிடலாம். கடந்த சில ஆண்டுகளாகச் சிறந்த எழுத்தாளரின் வளர்ச்சிக்குப் பக்கத்துணையாகி, வளரும் இலக்கிய சமுதாயத்திற்கு மகத்தான பணிபுரியும் 'ஈழநாடு' வாரமலரின் இம்மாதத்தின் முதல் நான்கு கிழமைகளிலும் வெளியான சிறுகதைகளை நோக்குமிடத்து அதன் பணியின் பரிணமிப்பு பளிச்சிடுவதைப் பார்க்கமுடிகிறது

### 'கரை காணாத கப்பல்'

அந்தஸ்தும், போலிக்கௌரவமும் அல்ல வாழ்வு. உண்மையான, மென்மையான அன்பில்தான் வாழ்வே அடங்கியிருக்கிறது. 2-11-80ல் மண்டைதீவு கலைச்செல்வி எழுதிய கரை காணாத கப்பல் கதையின் உள்ளீடு இது!

தன் படிப்பு, அழகிற்கேற்ற மணமகனை நினைக்கும் சுதா, முடிவில் தன் குடும்ப நிலவரம் உணர்ந்தபோது— தனக்குப் பேசிவந்த, தன்னைவிடப் படிப்பில் குறைந்த ராஜனை முடிவில் விரும்பியபோது— தனது திருமண அழைப்பதனை அனுப்புகிறான் அவன்.

கப்பல் கரை காணாது தவிக்கிறது...

கருவினடியில் கதை உறைத்தாலும், சமூகப் பார்வையில் ஏனோ சுவைக்கவில்லை! கதையின் நடையில் தளர்வில்லை! கருத்தில் குறைவில்லை. கதையின் சுவையின்மை அதன் தொய்விற்குப் பக்கத்துணை! ஆனாலும் கதாசிரியையின் ஆரம்பகால முயற்சி ஆதலால் சற்றே திருப்தி!

### 'ஓ! இந்த மனிதர்கள்?'

மரணப் படுக்கையில் முனகும் மனைவியை மீட்க மருந்திற்குப் பணமின்றி அலையும் முருகேசன், தன் உற்றார், உறவினரிடமும் கைநீட்டியும் பலனின்றி ஒடுங்கிப்போய், வாழ்வே உடைந்த நிலையில் உணரும் வாசகம்..... ஓ! இந்த மனிதர்கள்? 9-11-80ல் வெளியானது.

பணம் — பணத்திற்காகவே உறவுகள் — பணத்தின் அடிப்படையிலேயே சுகதுக்கங்கள்— பணத்தின் அளவுகோலினாலேயே அனுதாபங்கள்! —கேவலத்து ஜென்மங்கள்; ஆபத்திற்குக் கைவிரித்த இந்த மனிதர்களின்...... அவளது உயிரற்ற உடலை எடுத்துச் சென்றதும் துக்கம் விசாரிக்க வரத்தான் போகிறார்கள்! ஒப்பாரிவைத்து அழத்தான்போகிறார்கள்! ஓ! இவர்கள் எல்லாம் மனிதர்கள்தானா? —இவ்வாறு தெளிந்த நீரோடையான கதைக்களம்! சுமாரான பின்னல்! முடிவில் சகலர் மனதையும் தீயிட்ட மெழுகாக்கிறது கதை?

கதையின் நடையும், கைகோக்கும் கிராமிய வாசனையும் கதையாய் அமைந்து சிறுகதைக்கு அழகூட்டுகின்றன!

வழமையாகப் பொதிந்திருக்கும் தத்துவங்கள், சிங்கை திவாகரன் அவர்களின் இந்தக் கதையில் மலிவாகியுள்ளது! நீண்ட நாட்களின் பின் நல்ல கதையொன்றைப் படித்த திருப்தி!

### 'புல்லுருவிகள் உள்ளவரை'

சமுதாயப் புல்லுருவிகள் உள்ளவரை தியாகிகளின் சமாதிகளும் அதிகரித்துக் கொண்டே செல்லும்! —அருமையான கருத்து, கதையினிடை வீழ்கிறது. 16-11-80ல் வெளியானது.

ஓர் அகல்யா, அபிராமிக்கு மட்டுமல்ல..... இது எத்தனையோ அகல்யா.....அபிராமி..... வாழ்வில் நடந்த கதை! சீரிய சித்தரிப்பு! ஆழ் கருத்து! திகிர்க்கிறது! —ஆனால் ஆரம்பத்திலும் தொடர்விலும் விதண்டா வர்ணனைகள் கதையின் நிறைவிற்குக் குறைவாகிவிடுகின்றன! சோதனை தவிர்த்துக் கதையைச் சற்று நிறை முற்பட்டிருக்கலாம்.

சகுந்தலா தம்புசாமி ஆரம்ப எழுத்தாளர்! பார்வையிலேயே ஆழமான சமூக ஊடுருவல்! சிறப்பாகத் தொடரின் வளமான எதிர்காலம்..... அந்த வகையில் உளத் திருப்தி!

### 'ருக்கிங்'

உளத் துணிவிற்கும், தெளிவிற்குமே ருக்கிங் என்பதைச் சூசகமாய் விளக்குகிறார் வன்னியூர் அ. அன்ரனி மனோகரன் அவர்கள். கதை ஆசிரியரின் அனுபவ முத்திரை! களம் கம்பஸ் மாணவர்களுக்கே உரித்தானது! கம்பஸ் கனவாசனை கமகமக்கக் கதை சுவைக்கிறது!

''வெட்டுறு சிரிப்பை!'', நீ போறது கம்பசுக்கா அல்லது கம்மாலைக்கா?'', ''வன்டனுக்குப் போட்டுவா'' போன்ற இடங்கள் சுவாரஸ்யமாயிருக்கின்றன.

மொத்தத்தில் சிறப்பான சிறுகதை. கம்பஸ் மாணவர்களும், புகவுள்ள மாணவர்களும் வாசித்துத் தெளியச் சிறந்த சாதனம்! கதை அவர்களுக்கே..... மனத்திருப்தி!

புலோலியூர் இரத்தினவேலோன்

கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்

## 18 ஆண்டு பூர்த்தி [illegible] இன்று கொண்டாடுகின்றது

கோண்டாவில் கல்விச்சாலைகள் மலிந்த கிராமம். தொழில் மேம்பாடுடைய பகுதி. இங்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் அமைந்திருப்பது மிகவும் பொருத்தமாகும்.

பதினெட்டு ஆண்டுப் பருவம் எய்தி நிற்கும் இவ் வித்தியாலயம் இன்று பெற்றோர் தினம், பரிசளிப்பு விழா என்பவற்றினைக்கொண்டாடவிருக்கின்றது.

மாணவர்கட்குச் சந்தர்ப்பமும், ஊக்கமும் அளித்திடின் அவர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்துவர். கல்லூரிகள் மாணவர் திறமைகளை வெளிப்படுத்தும் களரிகளாக மாறல் பொருத்தமுடையதாம். பல்திறமைகளையும் வளர்த்திடும் நோக்கோடு போட்டிகள் நடத்திப் பரிசளிப்புமூலம் ஊக்கிவரும் வருடாந்தப் பரிசளிப்பு விழா இவ்வாண்டு பரந்த அளவில் இயல், இசை, கலைவிழாக்களாக விரிவுபட்ட முறையில் கொண்டாடப்படுகிறது. மாணவர்களின் எழுத்தாற்றலை வெளிப்படுத்தும் ''இராமகிருஷ்ணன்'' சஞ்சிகை இவ்வாண்டு மலர்கின்றது. மிக்க துணிவோடு மாணவர்களின் படைப்புகளைக் கல்விக்குலகிற்குச் சமர்ப்பித்துநிற்கும் முதற் சஞ்சிகை வெளியீட்டுவிழா இவ்வாண்டுவிழாவிற்கு உரமூட்டி நிற்கின்றது.

பெற்றோர், மாணவர், ஆசிரியர்களைக் கொண்ட முத்துறை ஆற்றல்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டினைப் பெற்றிருப்பது இவ்வித்தியாலயம் துரிதவளர்ச்சி காணுவதற்குக் காரணமாகும். திரிகரணசுத்தியோடு சேவையை நல்கிவரும் ஆசிரியர்கள் செயற்றிறன் கொண்ட அதிபர், பின்நின்று உந்துசக்தியாக விளங்கும் பெற்றோர்கள் ஆய பல்திறத்தாரின் உழைப்பின் பெறுபேறாக பதினெட்டு ஆண்டுகளில் துரிதமாக வளர்ந்து உயர்வகுப்புகளுடன் கூடிய ஒரு ஒப்பற்ற வித்தியாலயமாக விளங்கி நிற்கின்றது.

திருமதிநா.தளையசிங்கம்
(உப அதிபர்)

## மணிக்கூட்டுக் கோபுரம்

மணி முடியாம் யாழ் நகரில்
மகாத்மா காந்தி தெரு முன்னமைந்த
மணிக்கூட்டுக் கோபுரத்தின்
மகத்தான சரிதையிது.

மரித்தோரும் வியக்கும் வண்ணம்
விரைவாய் எழுந்த சாரம்
தரித்தது அந்நூடனேன்?
உரையல்ல உண்மையிது.

சாரங்கள் உக்கினால் உக்கும்
பாருங்கள் அதன்பின் அதனைக் — கடி
காரங்கள் அதுவரைக்கும்
ஓடிக் கொண்டேயிருக்கும்.

தே. அ. யோகநாதன்
மண்டைதீவு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சேர். பொன். இராமநாதன் நினைவாஞ்சலிக் கட்டுரை

# தமிழ்ச்சிறாரின் கல்வியில் சேர் பொன். இராமநாதனுக்கு அளப்பரிய அக்கறை இருந்தது

தன்னல நோக்கமும் பாரபட்சமுமின்றி மக்கள் நலனையே பெரிதாகக் கருதிச் செயல்படும் பெருமக்களின் தூயநோக்கங்களும், அவர்கள் வகுக்கும் சீரிய திட்டங்களும் அவர்தம் காலத்திலல்லாவிடினும் பிறிதொரு காலத்திலாகுதல் நிறைவெய்தவே செய்யும் என்பது உண்மையெனில் சேர் பொன். இராமநாதன் கல்வித்துறையில் கொண்டிருந்த நோக்கங்களும் — வகுத்த திட்டங்களும் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தோன்றியதன்மூலம் நிறைவெய்தியுள்ளது என்று கூறுவது மிகவும் பொருத்தமான கருத்தாகும்.

### உலகத் தமிழருக்காக

தமிழ்நாட்டில் பல்கலைக் கழகம் ஒன்றினைத் தோற்றுவிக்கும் ஆசைகொண்ட செட்டிநாட்டரசர் அண்ணாமலைச்

> "சேர் பொன்.இராமநாதன் கல்வித்துறையிலேயே தமது சிந்தனையின் பெரும்பகுதியைச் செலவிட்டுள்ளார்என்பது வெள்ளிடைமலை. அவர் நிறுவிய கல்விநிலையங்களே இதற்குச் சான்றுபகர்வனவாயுள்ளன. அதிலும் பெண்கல்வியில் அவர் கொண்டிருந்த அக்கறை அளப்பரியது."

செட்டியார் அவர்கள் உலகிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கும் சென்று அங்குள்ள அமைப்புக்களையெல்லாம் ஆராய்ந்து அறிந்து வந்தார் என்று கூறப்படுவதுண்டு. அப்பெருமகன் உலகில் உள்ள தமிழ்மக்கள் அனைவருமே பயன்பெறும் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினைத் தோற்றுவித்தார்.

அதேபோன்று இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் அனைவருமே பயன்பெறக்கூடியதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைவதற்கு வித்திட்டார் சேர் பொன். இராமநாதன். இன்று இலங்கை மக்களுக்கு மாத்திரம் பயன்படுவதாகவிருக்கும் இப்பல்கலைக்கழகம்எதிர் காலத்தில் உலகத்தமிழர் அனைவருமே பயன்பெறக்கூடியதாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கமுடியும்.

பரமேஸ்வராக் கல்லூரியை அன்று உருவாக்கிய அப்பெரியார் ஒருகாலத்தில் அது பல்கலைக்கழகமாக வளர்ச்சியடையும் வித்திலேயே அமைத்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. பரமேஸ்வராக் கல்லூரியும் இராமநாதன் மகளிர் கல்லூரியின் ஒருபகுதியும் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முக்கியபிரிவுகளாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

மதிநுட்பமிக்க சட்டவல்லுனராகவிருந்து பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவிவகிக்கும் அளவுக்கு அத்துறையில் சிறப்பெய்தியிருந்தபோதிலும், இங்கிலாந்துக்குச் சென்று பிரிட்டிஷ் அரசுடன் இலங்கை மக்கள் சார்பில் வாதிடும் அளவுக்கு துணிச்சல்மிக்கஅரசியல் மேதையாக விளங்கியபோதிலும், சமய, தத்துவ, விஞ்ஞானத்துறைகளில் அளப்பரிய அறிவும் ஆற்றலும்மிக்க சிந்தனையாளராய்த் திகழ்ந்தபோதிலும், சேர் பொன். இராமநாதன் கல்வித்துறையிலேயே தமது சிந்தனையின் பெரும்பகுதியையும் செலவிட்டுள்ளார் என்பது வெள்ளிடைமலை. அவர் நிறுவிய கல்வி நிலையங்களே இதற்குச்சான்று பகர்வனவாயுள்ளன. அதிலும் பெண்கல்வி வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறை அளப்பரியது.

### பிரிட்டிஷ் ஆளுநரின் புகழ்மாலை

கல்வித்துறையில் அப்பெருமகனர் கொண்டிருந்த நோக்கத்தையும் கொள்கையையும் பற்றி இலங்கையின் முன்னாள் ஆளுநர் ஒருவர் வெளியிட்டுள்ள கருத்து நமது சிந்தனையைத் தூண்டுவதாகவுள்ளது,

1915ம் ஆண்டு மார்ச்மாதம் 2ம் திகதி இராமநாதன்கல்லூரியின் முதலாவது பரிசளிப்பு விழாவில் இலங்கையின் அப்போதைய ஆளுநர் சேர் ரொபர்ட் (Sir Roberts Chalmers) கலந்துகொண்டு பேசியுள்ளார் அந்த உரையின் சில பகுதிகள் பின்வருமாறு;

கல்விபற்றிய தமது பொதுவான கருத்துக்களையும் தாம் மிக அருமையாகக் கருதும் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் அவருக்குள்ள ஆர்வத்தையும் திரு. இராமநாதன் அவ்வப்போது எனக்கு எடுத்துக்கூறியுள்ளார்.

> இன்று அப்பெரியார் மறைந்து 50 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

ஒருமனிதன் - அவன்யாராய் இருந்தாலும் - அவனது பணி எதுவாய் இருந்தாலும், தனது மனதுக்குப் பிடித்தமான ஒரு பணியைச் செய்து முடிப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட முனைவானாகில் - அப்படியான மனிதன்மீது எனக்கு எப்பொழுதுமே அக்கறை ஏற்படுவதுண்டு. இதுபற்றி நீங்கள் சிந்திப்பதானால் முதலில் நீங்கள் செய்ய வேண்டியது, அந்த மனிதனின் அல்லது பெண்ணின் உண்மையான நிலை என்னவென்று புரிந்து கொள்வதாகும். அந்த மனிதனின்நோக்கம் என்ன; அதனை வழிப்படுத்தும் கொள்கை என்ன; அந்த இடத்தில் உங்களை வைத்து முதலில் சிந்தியுங்கள். அவர்களின் சூழ்நிலையில் உங்களை நிறுத்திப்பாருங்கள். அதன்பின் யோசித்து முடிவுக்கு வாருங்கள். இம்மாதிரியான விஷயங்களில் விளக்கம் பெறுவதற்கு இது தான் ஆரம்ப வழிமுறையாகும்.

திரு. இராமநாதன் தாம் கொண்டுள்ள கொள்கைகள், சிந்தனைகள் மூலம் அவர் எதனைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளார்? நீங்கள் இக்கட்டிடத்தின் நுழைவாயிலை முதன் முதல் அடைந்தவுடனேயே இது ஒரு மகளிர் பாடசாலையென்பதை உணர்வீர்கள்.



திரு. இராமநாதனை, அவர் முன்னர் நீதிமன்றத்தில் மற்றவர்களைக் குறுக்கு விசாரணை செய்ததுபோல் இன்று குறுக்கு விசாரணை செய்து பார்ப்பீர்களானல் சாதாரண இந்த உண்மையை எளிதாகப் புரிந்து கொள்வீர்கள்.

அவரிடம் வேறுபல கருத்துக்களும் உண்டு. அவை விரிவானவை. ஆனால் ஒரு செயலூக்கம் கொண்ட மனிதர் என்ற வகையில் ஒரே சமயத்தில் ஒரு விஷயத்தில்தான் அவர்ஈடுபடுவார். இப்போழுது மகளிர் பாடசாலையொன்று திறந்து வைக்கப்பட்டதைக் கண்டோம். பெண் கல்வி தொடர்பாக தமிழில் பல பழமொழிகள் உண்டு என்பதை நான் அறிவேன். பெண்களின் உயர்கல்வி விஷயத்தில் இப்பழமொழிகள் பொருத்தமாய் இல்லை.

திரு. இராமநாதனின் பணிகளில் பெண்கல்வியே சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இதில் விசேஷ அம்சமொன்றுண்டு. நான் முன்னர் கூறியது போல் நீங்கள் இரசனையுடன் அவதானித்தால் இதனைஉய்த்துணரமுடியும்......"

ஆளுநர் மேலும் பேசுகையில், கடந்த காலத்தைப் புறக்கணித்து, மீளவும் அதனை நிலைநாட்ட முயலாமலிருக்கும் ஒரு மக்கள் சமுதாயம் தனக்கு ஒரு எதிர்காலமிருப்பதாக எதிர்பார்க்க முடியாது. ஆனல் அச்சமுதாயம் தனது கடந்த காலப்போக்கை மாத்திரம் அனுசரிக்காமல் பழமை நிலையைஅடிவேராகக்கொண்டு வளர்ந்து தனித்துவமாக விளங்க முயலவேண்டும் என்று கூறியுள்ளார்.

### செல்வமும் செல்வாக்கும்

சேர் பொன். இராமநாதன் 1851-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பிறந்தார். குமாரசாமி, அருணாசலம் என இவரது இரு சகோதரர்கள் இவரைப் போலவே பேரும் புகழோடும் வாழ்ந்தனர்.

சிறு வயதில் இராமநாதன் சகோதரர்கள் சென்னை பிரசிடென்சிகல்லூரியில் மேற்கல்வி பயில்வதற்காக கப்பலில் சென்றார்கள். அவ்வமயம்அவர்களின் தந்தையார் அங்கு அவர்கள் பயன்படுத்துவதற்காக கருங்காலி மேசைகளும், நாற்காலிகளும் அனுப்பி வைத்தது மாத்திரமின்றி கூடவே குதிரையொன்றையும்அனுப்பி வைத்தாராம். சேர். இராமநாதன்குடும்பம் எத்தனை செல்வமும் செல்வாக்கும் பெற்று விளங்கியிருக்க வேண்டுமென்பதை இது காட்டுகின்றது.

[illegible] வழியில் கல்வி கற்கும் காலத்தில் சேர். சி. வி. ராமசாமி ஐயர், வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, பேராசிரியர் நெவின்சன்போன்ற புகழ்பெற்ற அறிஞர்கள் அங்கு ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இவ்வாறு புகழ்மிக்க அறிஞர்களிடம் கல்வி பயிலவும் அவர்களுடன் நெருக்கிப் பழகவும் சேர். இராமநாதனுக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

**'பன்னீரன்'**

### சட்டத்துறையில் ஆர்வம்

கல்வியின் இடைநடுவில் நாடு திரும்பிய சேர் இராமநாதன் சட்டத்துறையில் ஆர்வங்கொண்டு இலங்கையில் அப்பொழுது புகழோடு விளங்கிய சட்ட நிபுணர் சேர் றிச்சட் மோகனிடம் சட்டம் பயிலலானார். அக்காலத்தில் சட்டக்கல்லூரி எதுவும் இருக்கவில்லை. சிரேஷ்ட வழக்கறிஞர்களிடமே புதியவர்கள் சட்டம் பயிலவேண்டியிருந்தது.

பிற்காலத்தில் சட்டக்கல்லூரி ஒன்று தோன்றுவதற்குச் சேர் இராமநாதனே முன்னின்று உழைத்தார் என்பதை இச்சமயத்தில் நினைவுகூர்வது சாலவும் பொருந்தும். அக்கல்லூரியில் சிலகாலம் அவர் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

சேர் பொன். இராமநாதன் தமது 22வது வயதில் —இளமையிலேயே உயர் நீதிமன்ற வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

இத்துறையில் பணியாற்றியமை குறித்து அவர் பின்னொருபோது குறிப்பிடுகையில் "அச்சமோ, பாரபட்சமோ இன்றிச் சகல சமூகத்தினருக்காகவும் நான் வாதாடினேன். அதனல் எல்லா மக்களும் என்னில் நம்பிக்கை வைத்தனர்" என்று கூறியுள்ளார்.

1892ம் ஆண்டு சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவியேற்ற அவர் 1905ம் ஆண்டு வரை அப்பதவியை அலங்கரித்தார்.

### சட்ட நிருபணசபை உறுப்பினர்

1879ம் ஆண்டு சட்டநிருபணசபை உறுப்பினர் பதவிக்காகப் போட்டியிட்டார். அப்பொழுது அவருக்கு 28 வயது. இவரை ஆதரித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. 1879 ஆகஸ்ட் 27ந் திகதி அச்சபையில் உறுப்பினராக நியமனம் பெற்றார். இப்பதவியில் இருந்த காலத்தில் நாட்டுக்காக அவர் செய்த சேவைகள் அனந்தம். இதன் காரணமாகவே முன்னைநாள் இலங்கையின் பிரதமரும், தேசப்பிதாவுமாகிய அமரர் டி. எஸ். சேனநாயக்கா ஒருமுறை, "சேர் பொன். இராமநாதன்




சாதனங்கள் சிறந்தவை. இயக்
இலகுவான பாவ
செய்வதற்கு நவீன சக்தி
அடைக்கப்ப
லி 200 கார்ட்ரிட்ஜ்கள் (190 கிராம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது காலத்துக்கும், யுகத்துக்கும் மாத்திரமல்ல, எல்லாக் காலத்துக்குமே உரிய மகத்தான இலங்கையரா வார்'' எனக் குறிப்பிட்டுள்ளார்,

தத்துவம், சமயம், இலக்கியம், கல்வி ஆகிய பல்வேறு துறைகளிலும் அவர் ஆற்றல் மிக்கவராய்த் திகழ்ந்தார். சட்டத்துறையில் அதிமேதையாக விளங்கினர்.

நீதிமன்றங்களில் சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்யும் பொழுது மிகக்கண்ணியமாகவும், அன்பாகவும் நடந்து கொள்வாராம். சாட்சியளிப்பவரை சங்கடப்படுத்தாத வித த்தில் உண்மையை வெளிக்கொணரும் சாதுர்யம் அவருக்கிருந்ததாகக் கூறப்படுவதுண்டு.

## இங்கிலாந்து சென்று வாதாடினர்

இனக்கலவரத்தைப் பயன்படுத்தி அப்போதைய பிரிட்டிஷ் அரசு இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தியது. சிங்கள மக்களில் பெருந்தனவந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டு, இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டனர். சிலர் மரண தண்டனைக்கும் உள்ளானுர்கள் வதந்தி பரப்பலின் காரணமாக எழுந்துவிட்ட இந்த விரும்பத்தகாத சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு சேர் பொன். இராமநாதன் முழுமூச்சுடன் செயல்பட்டார். நாட்டின் பல இடங்களுக்கும் சென்று அமைதியை நிலைநாட்ட முயன்றுர். சட்டநிரூபண சபையில் இராணுவச்சட்டத்தை நீக்கும்படியும் அப்பாவிகளை விடுவிக்கும் படியும் வற்புறுத்தினுர். முதலாவது உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த அந்தவேளையிலும் தன் உயிரையும் பொருட்படுத்தாது இங்கிலந்து சென்று பிரிட்டிஷ் அரசுக்கும் மக்களுக்கும் நிலைமைகளை எடுத்து விளக்கினுர். அவர் முயற்சி பலித்தது. தேசியவீரர் என்ற புகழுடன் நாடு திரும்பினுர்.

## காட்சி இரண்டு

(உதயப் பொழுதினை அறிவிக்கும் பூபாள இன்னிசை. புல்லாங்குழல் இன்னிசை நன்று.)

தத்தை: (கதவில் தட்டுகிறுள்)

விச: கதவில் தட்டும் கண்ணியர் யாவரோ?

தத்: தட்டிக் கேட்கும் உரிமை இழந்தவள்.

விச: (சிறிதே சிரித்து) குறும்புக்காரி! குத்தல் ஏன்? உள் வா.

தத்: வந்தேன் தேவி! வணக்கம், ஏற்பீர்.

விச: தயக்கமேன் தத்தை! தனியிடம் இங்கு நான்மாத்திரமே உள்ளேன்......

தத்: நல்லது...... பிழைத்தேன்,

விச: (ஏளனமாக) பிழைத்தியோ? ஏனே?

தத்: பிழைத்திலேன், தப்பிப் பிழைத்தேன் என்றேன்.

விச: தப்பிலாத் தத்தையே! தப்பிடாதிருக்கப் புலியோ, சிங்கமோ, பூதமோ, பேயோ ஒன்றும்இங் கில்லை. உனக்கேன் அச்சம்?

தத்: அச்சம் இல்லை. அரசர் உங்களை இச்சையோடணைத்திங்கு இருப்பார் என்ற மயக்கம்! அதனுல் வந்திடும் தயக்கம்!

விச: போடி பேய்ச்சி! பூபதி காலையில் வரவேற் பிடத்தில் மந்திரி கட்டியங்காரனை அழைத்துக் கதைக்கச் சென்றனர்.

தத்: (பரிகாசமாக) ஆனுல் என்ன? அரை நொடிப்பொழுதில் காணு மிருதக் காரிகை உம்மைக் காணுதற் கென்றே ஓடிவந் திடுவார்......

விச: (பெருமூச்சு, மௌனம், கண்ணீர்)

தத்: தாயே! இதுஏன்? தங்களின் விழிகளில் முத்தாய்க் கண்ணீர் உகிழ்த்திடக் காண்பது பெருங்கொடுந் துன்பம். பேசுவீர்......

விச: ஏனே - எனக்கின்று இதயந் தனிற்பயம் ஏக்கம் எல்லாம் எழுந்தன, அறிகிலேன்,

தத்: கட்டியங் காரனைக் காலையிற் காண விட்டுமைத் தனிமையில் வேந்தர் சென்றதன் காரணம் உரைத்தால் காரியம் சொல்லுவேன்.

விச: அந்தப் புரத்தினில் அரசர் பெருமான் எந்தநேரமும்என் னேடினி திருக்கப் பதவிப் பொறுப்பினைப் பாவி கட்டியனின் கையில் அளித்திடக் கடிதினிற் சென்றனர்.

தத்: ஐயகோ! காமத்து இயல்பிது வேயோ? பொய்யனும் ஆசை பொருந்திய கொடியனும் ஆகிய கட்டியங் காரனுக்கு அரசுப் பொறுப்பினை அளிக்கப் போயினராமோ?

விச: அதனை நினைத்தே அழுகிறேன், தத்தை!

தத்: அம்மா! அரசரின் அன்புமா மனிடம் சென்றிதை உடனே சொன்னல்......?

விச: (விரக்தியுடன்) என்ன நடந்திடும் என்றும்அம் மாமனைத் தூக்கி எறிந்தே தாக்கிடும் மன்னவர் இன்றுநல்லுரைகளென் றேற்றிடுவாரோ?

தத்: முயல்வதில் இழப்பில்லை. முயல்வோம், வருக. ஆனுல்......

விச: என்ன ஆனுல்...... எதற்குஇத் தயக்கம்?

தத்: அரசர் இடையில் இவ்விடம் வந்தால்......?

விச: அதுநட வாதுஅக் கட்டியங்காரன் சுற்றி வளைத்துச் சுழற்றி மடக்கிப் பலநாழிகைப்பொழுது அவமாய் ஆக்கிப் பின்னரே அரசரை அனுப்பிவைத் திடுவான்.

தத்: அப்படி யானுல் அதுவும் நல்லதே. இப்பொழுதேநாம் மாமனுர் இடத்தைச் சென்றுவர நிலைமையைச் செவியுறுத் திடுவோம் வருக......

(செல்லல். இசை)

## காட்சி மூன்று

(அந்தப்புரம், சச்சந்தன் அரசவை செல்வதற்கு விசயையிடம் விடை கேட்கிறுள்)

சச்: விசயை, அரசவை செல்ல விடைகொடு.

விச: அரச கடமைகள் அனைத்தும் புரிந்து திரும்பியே வரஎன் சிறப்புவாழ்த் துக்கள்.

சச்: (ஏக்கத்தோடு) செம்லவா சொல்கிறுய்? செல்லுல்லும் கணம்யுகம் அல்லவா? அமுதமே! அறிந்திலாய் போலும்......

விச: (தேற்றும் குரலில்) காத்திடும் கண்களின் நீளெதிர் பார்ப்புகள் கூடிடும் பிரிவின்பின் கொள்ளையின்பு அல்லவோ?

சச்: (பெருமூச்சுவிட்டு) சரி சரி இதுதான் சபைசெலும் இறுதிமுறைஇனி உன்னைப் பிரிந்திட மாட்டேன் வருகிறேன்......

(ஏவலன் வருகிறுன்)

ஏவ: ..........வணக்கம் மன்னவ! தங்களின் அன்பு மாமனுர் தம்மை வந்துகண் டதன் பின் அவைக்களம் செல்லலாம் என உரைத் தனுப்பினுர்.

சச்: (எரிச்சலுடன்) முட்டாள்...... மூடன்...... நிர்மூடன்.

விச: அரசே, மூத்தவர் அவர் அழைப்பு ஏற்றுச் செல்வதே முறைமை..........

சச்: (கோபம் தணிந்து) செல்கிறேன் செல்கிறேன் உன் கடை விழியின் கட்டளையல்லவோ? மறுத்திட முடியுமா மாட்டேன், ஏவலா! வருகிறேன் என்று என் மாமனுக்கு உரைப்பாய்.

ஏவ: சித்தம், மன்னவா...... (செல்கிறுன்)

சச்: அவைக்குள் நானும் செல்வதன் முன்ஒரு வேண்டுகோள் என்றன் வெல்லப் பாகே!

விச: கட்டளை இடுங்கள் காத்திருக் கின்றேன்.

சச்: பிரிவின் வெப்பைக் குளிர்மை செய்திட உரிய வகையில் ஓரேயொரு முத்தம்!

(கூண்டிலிருந்து கிளி 'முத்தம், முத்தம்' என்று எதிரொலிக்கின்றது)

விச, கேட்டதா, கிளியின் கேலி...... சரிசரி வட்டியும் முதலுமாய் வந்தபின் கிடைக்கும் முத்த மழைக்குஇது அச்சவாரம்.

சச்: நன்று நான் நிற்கிறேன்......

விச்: மீண்டும் மறப்பா?

சச்: இல்லை...... இல்லை...... சென்று வருவதாய்ச் சொல்ல நினைத்தேன். வாய்தடு மாறி வந்துவிட்டது. மன்னித் திடு நான் வருகிறேன் விரைவில்.

(இசை)

(தொடரும்)

---

சேர் இராமநாதன் இந்து சமயத்துக்கு ஆற்றிய பணிகளைச் சிலவசனங்களில் கூறிவிடமுடியாது. அவர் கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த சமயங்களிலும் வியத்தகும் அறிவுபெற்றிருந்தார்.

கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் சைவமக்களுக்கு அவர் ஆற்றிய பணிகளின் மங்காச்சின்னமாக விளங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

1930ம் ஆண்டு 11ம் மாதம் 30ந் திகதி சேர் பொன். இராமநாதன் இவ்வுலகினின்றும் விலகி இறைவனடி சேர்ந்தார்.

அவர் நாமம் வாழ்க.


# காம்பிங் காஸ்.. சக்தி நிறைந்தது
## எங்கும் எப்பொழுதும் பாவிக்கக் கூடியது



உணவு சமைக்கவோ இருளைப்போக்கி வெளிச்சத்தை ஏற்றவோ, தூக்கிச் செல்லக்கூடிய காம்பிங் காஸ் ...ங்கள் சிறந்தவை. இயக்க இலகுவானவை, பாவனைக்கு எப்பொழுதும் தயாராக இருப்பவை. இச் சாதனங்கள் புட்டேன் காஸில் இயங்குகின்றன. இலகுவான பாவனைக்கென கைக்கடக்கமான நீல அடைப்புகளிலும் குவளைகளிலும் விற்பனைக்குள்ளன. தேவை ஏற்படும் பொழுதெல்லாம் பாவனை செய்வதற்கு நவீன சக்தியைக் கொண்ட மீள் நிரப்புக் குவளைகள் எப்பொழுதும் கிடைக்கும். இறக்குமதி செய்யப்பட்ட மீள் நிரப்புக் குவளைகள் மீண்டும் நிரப்ப முடியாமல் பாதுகாப்பாக அடைக்கப்பட்டுள்ளன. வேண்டிய தொகை மீள் நிரப்பிகள் விற்பனைக்குள்ளன.

காம்பிங் காஸ் ஸ்டோவ் ரூ. 180/-ம் மேலும், லாம்புகள் ரூ. 240/-ம் மேலும்

200 கார்ட்ரிட்ஜ்கள் (190 கிராம்) ஒவ்வொன்று ரூ. 20/- பிரத்தியேக ... கிடைக்கும்



விசாரணைகள்:
விற்பனை முகாமையாளர்,
தொலைபேசி: 21464

கொழும்பு காஸ் அண்ட் வாட்டர் கொம்பனி
லிமிட்டெட்டின் மரபு உரிமை பெற்ற
இலங்கை அரசாங்கம்,
காஸ் வேர்க்ஸ் ஸ்ட்றீட்,
கொழும்பு 12.
தொலைபேசி: 32311, 32312, 37042, 37043


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொ. த. (உயர்தரம்) புதிய பாடத்திட்டம்-5

# விலங்கியல்

திருமதி ரி. சிதம்பரநாதன் பி. எஸ் சி.
(ஆசிரியை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

1, தசையிழையங்களின் வகைகள் யாவை?
(i) வரித்தசை (ii) வரி கொள்ளாத்தசை (iii) இதயத்தசை.

2. மனிதனின் முன்கை மடிக்கப்படுவதுடன் தொடர்புடைய இரு முக்கிய தசைகளின் பெயர்களைத்தருக.
(i) இருதலைத்தசை
(ii) முத்தலைத்தசை

3. மேற்கூறிய தசைகள் வன்கூட்டுடன் பொருந்தியுள்ள ஆரம்பப் புள்ளியையும் இணைப்புப்புள்ளியையும் தருக.

இருதலைத்தசை:
ஆரம்பப்புள்ளி - காக்கையலகுருமுளை, இணைப்புப்புள்ளி - ஆரை.

முத்தலைத்தசை.
ஆரம்பப்புள்ளி - தோட்பட்டையென்பு, இணைப்புப்புள்ளி முழங்கை முளை.

4. தோளையின் இருதலைத் தசையின் இழையஅமைப்பினை விபரிக்க.
தசைமேல் மடல், தசைச் சூழ்மடல், தசையகமடல், தசைநார், நாருறை, தசைச் சிறுநார், தசைப்பாத்து, அத்தின் இழை, மயோசின் இழை A, I, H பட்டிகள், Z மென்சவ்வு, குருதிக்கலன், நரம்பு.

5. தசை நார்களில் காணப்படும் இரண்டு புரதங்கள் யாவை?
அத்தின், மயோசின்

6. மனித உடலில் அதிக வலுப்பெற்ற தசையாது?
இலியொப்சொயஸ் தசை (Iliopsoas Muscle)

7. மனிதனில் பதாங்க உறுப்பாக அமையும் தசை யாது?
உள்ளங் காற்றசை (Plantaris Muscle)

8. இடுப்புப் பிரதேசத்தில் காணப்படுவதும் தொடையின் நீட்சிக்கு உதவுவதுமான தசை யாது?
நான்முகத் தொடைத்தசை (Quadriceps Femoris Muscle)

9. மனிதனின் முன் அவயவம் தனது தொழிற்பாட்டிற்காகக் காட்டும் இசைவாக்கம் யாது?
ஆரையும் அரத்தியும் சுழலக் கூடியதாக ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தலும் பெருவிரலானது மற்றைய விரல்களை முட்டக்கூடியதாக இருத்தலும் ஆகும்.

10 இருதலைத் தசைக்கும் இதயத் தசைக்குமிடையே யுள்ள வேறுபாடுகள் 5 கூறுக.

இருதலைத்தசை
(i) தசைமேல் மடல், தசைச் சூழ்மடல் தசையகமடல (ii) தசை நாருறை உண்டு (iii) பல கருக்கள். (iv) நீண்ட நார்களால் ஆக்கப்பட்டவை. (v இச்சை ழி இயங்கும்.

இதயத்தசை
(i) தொடுப்பிழையம்
(ii) மென்சவ்வு உண்டு.
(iii) ஒரு கரு
(iv) ஒரு கனகிளைகொண்ட செவ்வ வடிவக்கலம்
(v) தன்னிச்சைக்கம்.

11. உடலில் காணப்படும் இழையங்களுள் மிகவும் நீண்ட கலத்தைக் கொண்ட உடல் இழையம் யாது?
நரம்பிழையம்

12. மேற்கூறிய இழையத்தின் தொழில் யாது?
கணத்தாக்கங்களைக் கடத்தல்

13. முண்ணாண் நரம்பு நாரில் கணத்தாக்கங்கள் மிக வேகமாகக் கடத்தப்படுவதற்குரிய காரணம் யாது?
மயலின் சவசம் உண்டு.

14. கணத் தாக்கக் கடத்தலுக்கு மிக அவசியமான அயன்கள் எவை?
சோடியம், பொற்றாசியம்

15. நரம்பிணைப்புகளில் கணத்தாக்கங்களைக் கடத்துவதில் பங்குபெறும் இரசாயனப்பதார்த்தம் யாது?
அசற்றைல் கோலின் (Acetylcholine)

16. ஒரு நரம்புக் கலத்தில் காணப்படும்முனைகள் எத்தனை? அவையாவை?
2—உட்காவு நரம்புமுனைகள் வெளிக்காவு நரம்பு முனைகள்.

17. ஒரு நரம்பின் நாருறைகளின் ஒழுங்கு யாது? (உள்ளிருந்து வெளிப்புறமாக)
சுற்று நரம்பியம், அகநரம்பியம், மேல் நரம்பியம்.

18. மூலவுயிர் மேலணி எவ்வகையான இழையங்களில் காணப்படும்?
இனப்பெருக்க விழையம்

19. மேற்கூறிய இழையத்தினின்றும் தோற்றுவிக்கப்படுபவை யாவை?
விந்து, சூல்.

# மாணவ சக்தி

ந. சண்முகப்பிரபு
(விவசாய பீடம்
பேராதனை பல்கலைக் கழகம்)

மாணவர்கள் சக்தி இன்று உலகெங்கும் உணரப்பட்டுவருகிறது. இவர்கள்தாம் நாட்டின் வருங்கால சிற்பிகள். முன்னேற்றத்தின் ஏணிப்படிகள் நாட்டை ஆளும் தலைவர்களும், வல்லமைமிக்க விஞ்ஞானிகளும் அறிஞர்களும் ஏன் சிறந்த மெய்ஞ்ஞானிகளும் கூட இன்றைய மாணவர்களிடையே இருந்துதான் தோன்ற வேண்டும். இத்தகைய மாணவர்கள் தங்கள் சக்தியை உணர்ந்துகொள்வது அவசியமானது. அத்துடன் அதற்கேற்ப தமது ஆளுமை, சிந்தனைகள், கருத்துக்களை வளர்த்துக்கொள்வது இன்றியமையாதது.

இளம் மாணவர்கள் சிறுவயதிலேயே நல்ல வழிகாட்டிகள் இன்மையால் தான் தமது எதிர்கால வாழ்வை திட்டமிட வாய்ப்பின்றிப் போகிறது. எந்த ஒரு மனிதனது வாழ்வையும் நிர்ணயிப்பது அம்மனிதனின் பரம்பரை இயல்பும் சூழலும் ஆகும் இத்தகைய இரு காரணிகளிலும் பரம்பரை இயல்புகள் மாற்றமுடியாதன. ஆனால் சூழல்தான் மனிதனால் ஓரளவு மாற்றி அமைக்கக்கூடியது. சூழல் எனும்போது ஒரு மனிதன் வளரும் சூழல் இதனை நிர்ணயித்து வழிகாட்டுபவர்கள் நிச்சயமாக பெற்றோர்களாகத்தான் இருப்பார்கள். இத்தகைய வழிகாட்டுதல் இளம் மாணவர்கட்கு மிகவும் அவசியமானது

இவ்வாறு வழிகாட்டுவது சிறந்த பெற்றோர்களினால் தான் முடியும். சிறந்த பெற்றோர் எனும்போது கல்வி அறிவு பிரதான இடம் வகிக்கிறது. எனினும் கல்வி அறிவு இல்லாத பெற்றோர்களிலும் பலர் தமது பிள்ளைகளின் வாழ்வை வளம்பெற சிறப்பான திட்டம் தீட்டி அவர்களைக் கல்விகற்க வைத்து முன்னேற்றுவதையே நோக்காகக் கொண்டிருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

சிறுவயதில் கல்விபுகட்டுதல், நல்லொழுக்கம் பயிற்றுதல், வல்லமையுள்ளவனாக ஆக்குதல் என்பன பெற்றோரின் கையிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு செய்வதற்கு பெற்றோர்கட்கும் பிள்ளைகட்கும் இடையே ஒரு நெருக்கமான தொடர்பு இருப்பது மிக மிக அவசியம். தனது எந்தப் பிரச்சனையையும் மனம் திறந்து பிள்ளை பெற்றோரிடம் கூறக் கூடியதாக பெற்றோர் நடந்து கொள்ளவேண்டும். அப்போது தான் சமூகத்தில் உள்ள தீய பழக்கங்கள், தீய நண்பர்களை பிள்ளைகள் இனம்காண முடியும், தமது அனுபவமூலம் உலக அறிவைப்பெற சுமார் 20 வயதுக்கு மேல்தான் இளம் பிள்ளைகளினால் முடியும். உலகின் நெளிவு சுளிவுகளைப் புரிந்துகொள்ள ஓரளவு பெற்றோர் 'திறந்த மனம்' படைத்தவர்களாக இருக்கவேண்டும். குறிப்பாக தாய்மூலம் போதனைகளை பிள்ளை பெறுவது சிறப்பு தந்தைமூலம் பிரதானமாக ஆண்பிள்ளைகளும், தாய்மூலம் பெண்பிள்ளைகளும் அறிவுரைகள் பெறுவது வரவேற்கத்தக்கதே.

இவ்வாறு சிறப்பான வழிகாட்டிகளாக பெற்றோர் அமையும்போது இளம் மாணவர்கள் சிறந்த இலட்சியங்களை முன்வைத்து தமது வாழ்வை ஆரம்பிப்பது எதிர்காலத்தில் மிக வும் வெற்றிகரமான வாழ்வை அமைக்க அடிகோலும். இலட்சியம் எனும்போது என்ன அது இலட்சியம்? எனும் வினா மனதில் எழலாம்

பொதுவாக 'பிறமக்களுக்கு சேவை செய்வதுதான்'' எந்த ஒரு மனிதனதும் இலட்சியமாக இருக்கவேண்டும் என அறநூல்கள் கூறுகின்றன. ஆனால் சாதாரண உலக 'இலட்சியங்களை' நோக்கும்போது இவ்வாறு அமைபவர்களைக் காண்பது மிகவும் அபூர்வமாக உள்ளது தனக்காக அல்லது தனது குடும்பத்துக்காக இலட்சியம் அமைப்பதுதான் தற்கால நிலைமை ஆக உள்ளது. ஓரளவில் சிக்கல்கள் மிகுந்த பொருளாதார சூழல் மக்கள் அனைவரையுமே மிகுந்த பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

பொருளாதார சிக்கல்கள் இல்லாத ஒரு நாட்டில்தான் ஏனைய அரசியல், விஞ்ஞான, மெய்ஞ்ஞான, கலை சார்ந்த துறைகளில் எல்லாம் இலட்சியவாதிகளைக் காணக்கூடியதாக இருக்கும். ஆனால் விதிவிலக்காக இத்தகைய பொருளாதார சிக்கல்களில் இருந்தும் பல இலட்சியவாதிகள் தமது விடாமுயற்சியால் வெற்றிகரமாக முன்னேறி இருக்கிறார்கள் ஓரளவு தமது குடும்ப முன்னேற்றம்கருதி இலட்சியம் தீட்டலாம் எனினும் அதற்கும் மேலாக ஒரு அடிப்படையான இலட்சியம் அமைவது அவசியம். இலட்சியங்களை அமைத்துக்கொள்வதில்தான் வாழ்வின் வெற்றிதங்கியுள்ளது.

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## உங்கள் பார்வைக்கு

'மாணவர் எண்ணம்' பகுதியில் தமது ஆக்கங்களும் பிரசுரமாவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று பல மாணவர்கள் எமக்கு கடிதத்திற்கு மேல் கடிதமாக எழுதுகிறார்கள்.

மாணவர்களே! உங்கள் ஆக்கங்களின் மூலம் எண்ணத்தை அலங்கரிப்பதே எமது நோக்கம். உங்கள் ஆக்கங்களை காகிதத்தில் ஒரு பக்கத்தில் அழகாக எழுதி 'மாணவர் எண்ணம்', ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். அவற்றில்தரமானவைநிச்சயம் பிரசுரிக்கப்படும்.

– கண்டோஸ்

## மாணவர்களின் ஐ. நா. பாதுகாப்பு சபைக் கூட்டம்

மாணவர்களிடையே ஐ. நா. பற்றிய அறிவை வளர்க்கவும், ஐ. நா. வின் பங்கு உலகில் எவ்வளவு முக்கியத்துவம் வகிக்கின்றது என்பதனை அறியப்படுத்தும் முகமாக, ஐ. நா. சபை உருவாகி - 35 வது வருட தினமான அக். 24ம் திகதி யாழ். லயன்ஸ் கழகத்தினரால் மாணவர்களிடையே ஒரு ஐ. நா. பாதுகாப்புச்சபைக்கூட்டம் நடத்தப்பட்டது. பல கல்லூரி மாணவ மாணவிகள் பல்வேறு நாட்டின் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டனர். இக்கூட்டத்திலே லிபியா பிரதிநிதியாகப் பங்குபற்றிய உடுவில் மகளிர் கல்லூரி மாணவியினால் ''நிரந்தர அங்கத்தவர்களின் அங்கீகாரம் பாதுகாப்புச் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்குத் தேவையானது'' என்ற ஐ. நா. சாசனத்தின் 27ம் பிரிவின் 3ம் பந்தியிலுள்ள சொற்றொடர் நீக்கப்படவேண்டும். அதாவது வீட்டோ (ரத்து) அதிகாரம் நீக்கப்படவேண்டும் என்ற பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. இதனை ஆதரித்தும் எதிர்த்தும் ஏனைய பிரதிநிதிகள் வாதிட்டனர். ரஷ்யநாட்டுப் பிரதிநிதியான யாழ். மத்திய கல்லூரி மாணவனும், அமெரிக்கநாட்டுப் பிரதிநிதியான யாழ்ப்பாணக்கல்லூரி மாணவனும், பிரிட்டன் பிரதிநிதியான சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியும், வேம்படி மகளிர் பாடசாலை மாணவியான சீன பிரதிநிதியும், லியோ சமூக அங்க[illegible] சிங்கப்பூர்ப் பிரதிநிதியும் எதிர்த்துவாதிட்டனர்.

சவூதி அரேபிய நாட்டின் பிரதிநிதியான சம்பத்திரிசியார் கல்லூரி மாணவனும், கியூபா நாட்டின் பிரதிநிதியான பரி.யோவான் கல்லூரி மாணவனும், இந்தியப் பிரதிநிதியான சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மாணவனும், தான்சானியாப் பிரதிநிதியான யாழ். இந்துக்கல்லூரி மாணவனும், மெக்சிக்கோ பிரதிநிதியான கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவனும் வைத்தீஸ்வரா வித்தியாலய மாணவனான ஜப்பான் பிரதிநிதியும் ஆதரித்து விவாதித்தனர். வல்லரசுகளில் ஒன்றானதும் வீட்டோ அதிகாரத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதுமான பிரான்ஸ்நாடு ''ரத்து அதிகாரம் நீக்கவேண்டும்'' என்பதை ஆதரித்து விவாதித்தது. ஆதரிப்போர் கூடுதலாக உள்ளதால் 'ரத்து அதிகாரம் நீக்கப்படவேண்டும்' என தலைவர் இதற்கு பதிலளித்தார். பங்குபற்றிய சகல மாணவர்களுக்கும் [illegible]

## கொஞ்சம் சிரியுங்கள்

ஒருவர்: எனது மனைவி, மரக்கறி வகைகளைப் பிஞ்சு பிஞ்சாக எடுத்துச் சமைத்தால் ருசியாக இருக்கும்.
மற்றவர்: என் மனைவி ரொட்டி சுட்டால் பிஞ்சுபிஞ்சு இருக்கும்.

பெர். சுந்தரேஸ்வரன்
இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

ரகு: ரவி, நீ ஏன் இப்படித் தலைகிழா நிற்கிறாய்?
ரவி: எங்க அம்மா சொன்னாங்க: உலகம் தலைகிழாக நிக்குதென்று. அதுதான்.

வாத்தியார்: தேங்காயில் என்ன சுவையை அறியலாம்?
மாணவன்: தேங் ''காய்'' ஆகையால் புளிப்புச் சுவையை அறியலாம் சார்.

கு. குணதாசன்
யாழ். இந்துக்கல்லூரி.

ஆசிரியர்: 8 பக்கங்கள் என்றால்என்னகோணி 9 பக்கங்கள் என்றால் நவகோணி. 10 பக்கங்கள் என்றால் என்ன?
மாணவன்: தசகோணி சேர்.
ஆசிரியர்; கெட்டிக்காரன் நல்லாப் படிக்க வேணும்.
மாணவன்: அப்ப 11 பக்கம் என்றால் லெவன் கோணியோ சேர்.
ஆசிரியர், ? ? ? ?

இ. இரட்ணராஜ்
(கனகரத்தினம்
மத்திய மாக
வித்தியாலயம்)

## பலகாலம் வாழ

அமெரிக்காவிலுள்ள மிகப் பிரபலமான விஞ்ஞானிகளையுடைய ஒரு சங்கம் ஆரோக்கியத்திற்கும் நீடித்த ஆயுளுக்கும் வேண்டிய விதிகளை பின்வருமாறு குறிக்கிறது.

★ நல்ல காற்றோட்டமுள்ள அறைகளில் வசிக்க வேண்டும்.

★ நம் வேலையையும் நம் பொழுது போக்கையும் திறந்த வெளிகளில் வைத்துக் கொள்ள வேண்டும்.

★ வீட்டுக்கு வெளியே தூங்குவது நலம்.

★ ஆழ்ந்த மூச்சு எடுக்க வேண்டும்.

★ மாமிசத்தையும் காரஞ் சேர்த்த உணவுகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.

★ பெருந்தீனியை ஒழிக்க வேண்டும்.

★ நன்றாக மென்று மெதுவாகச் சாப்பிடவேண்டும்.

★ மலம் அன்றாடம் கழிய வேண்டும்,

★ பல், ஈறு, நாக்கு இவற்றை சுத்தமாக வைக்க வேண்டும்.

★ நிற்கும்போதும், நடக்கும் போதும், உட்காரும் போதும் நிமிர்ந்திருக்க வேண்டும்,

★ விஷபதார்த்தங்களும் நோய்க்கிருமிகளும் உடம்பிலே பிரவேசியாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

★ அளவுக்கு மிஞ்சி வேலை செய்யக் கூடாது.

★ ஏழு அல்லது ஒன்பது மணி நேரத்துக்குக் குறையாமல் தூங்க வேண்டும்.

★ கோபத்தையும் கவலையையும் போக்கி சாந்தமான மனதோடு இருக்க வேண்டும்.

தொகுப்பு:
கந்தையா—அருந்தவராசா
(வட்டு இந்துக் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்:

# புலவர் பார்வதிநாதசிவத்தின் ‘இருவேறுஉலகம்’: ...ஒரு நோக்கு

மகாலிங்கசிவத்தின் புதல்வரான புலவர் பார்வதிநாதசிவமும் தமக்கெனத் தனித்துவப்பார்வை கொண்டவர். சுற்றுச்சூழ்நிலைகளையும் நாட்டு நடப்பியல்புகளையும் நாசுக்காக நகைச்சுவையுணர்வுடன் கிண்டல்செய்யத் தெரிந்தவர். பழமையின் பொலிவும் புதுமையின் உயிரோட்டமும் நிறைந்தனவாக அவரது கவிதைகள் விளங்குகின்றன'

புலவரின் பணம் என்னும் பாவை என்ற கவிதை, உலகியலிற் பணம் செலுத்தும் ஆதிக்கத்தின் பல்வேறு வடிவங்களையும் காட்டுகின்றது. காதலித்த பெண்ணைக் கைவிட்டு பெருநிதியம் படைத்தவளைக் கைப்பிடிக்கும் ஆணினத்தைத் தட்டிக்கேட்கும் பெண்ணாக அஞ்சுகம்என்பவளை,'அஞ்சுகம் துணிந்துவிட்டாள்' என்ற கவிதையில் அறிமுகப்படுத்தியுள்ளார். காதலிலே தோல்வியுற்ற கன்னியாயினும் அவனையே நெஞ்சில்நிறுத்தி அவள் கலங்கவில்லை; "தெள்ளிய நீரெனவே நல்ல சீரிய வாழ்வினை நாடிநின்றாள்" புலவரின் புதுமைவேட்கை கவிதையில்தொக்குநிற்கிறது. இல்லக

த்துவதிற் பெரும்பங்கினை வகிப்பன அவரது நகைச்சுவைக் கவிதைகளே. குடிகாரரின் விபரீதப்போக்குகள், திருமணப் பதிவு முடிந்த தம்பதியரின் நிலை, மின்சார வெட்டினால் ஏற்படும் வியத்தகு நிகழ்வுகள், பாண், மா, அரிசி ஆகியனவற்றின் சமூகச் செல்வாக்கு, அதிபரின் மோட்டார் வண்டியினது அற்புத ஆற்றல்கள் ஆகிய விடயங்களை நகைமிகு கவிதைகளாக்கித்தந்துள்ளார். மதுவின் விபரீதச் செயல்களை மதுவினில் ஒருவர் என்ற கவிதையிலே சுவைபடத் தருகின்றார். "ஓர்குடி செய்த பாவம் ஈதென ஓர் குடிகாரர் போகின்றார் அதோ" என்று குடிகாரரொருவரை அறிமுகம்செய்து "பொற்றொடிமீது மோதியே அயலுள கற்றூண் ஒன்றிடம் மன்னிப்பு" கேட்கும் அவரது பரிதாப நிலையினைச் சுட்டுகின்றார். எழுத்துக்கு மறுநாள் என்ற கவிதையிலும் நகை இழைகின்றது. திருமணப் பதிவு முடிந்த மறுநாள் மாப்பிள்ளைப் பையனும் புதுமணப் பெண்ணும் சந்திக்கையில் ஏற்படும் புதிய உணர்வுகளைப் புலவர் அழகுறச் சித்திரித்துள்ளார்.

**துரை. மனோகரன் எம். ஏ.**

விளக்காக விளங்கும் பெண்ணுக்கு நேரும் இடுக்கண்களை அடுக்கிச் சொல்கிறது. இல்லக விளக்கு எனும் கவிதை, எங்கே அவர்? என்ற கவிதை மூலம் முடியாண்ட மன்னரும் பின்னர் பிடிசாம்பராய்ப் போகும் இயற்கை நியதியினைத் தற்கால சமுதாயத்துக்குப் பொருந்துமாறு பாடியுள்ளார். குளிர் என்ற கவிதையைப் படைத்த கவிஞரிடத்து குளிரில் நாயும் குட்டிகளும் சுகமாகத் தூங்குகின்றன. ஆனால் மனிதத் தாயும் சேயும் வாடி வதங்குகின்றனர். இந்நிலை ஏன் என்ற ஏக்கம் வியாபித்து நிற்கிறது. குறும்பாய் நகைத்தான் அவன் வாழி என்ற புலவரின் இன்னொரு கவிதை, சிலப்பதிகாரக்கானல் வரிப் பாடல்களை ஓரளவு நினைவுறுத்துகின்றது.

புலவர் பார்வதிநாத சிவத்தை நவாசகரிடத்து நினைவுறு

"மேனகை்யை ஒருக்காற்
பார்த்தாள்
விளக்கும்சாளரத்தைப்
பார்த்தாள்
ஆசைஎ்ய அவன்மேல்
வைத்தும்
அவன்முகம் பார்க்கநாணி"

புதுமணப் பெண் தடுமாறுகின்றாள். அவனோ உஷாராகவே அமர்ந்திருக்கின்றான். ஏனெனில்,

"மாப்பிள்ளை கொழும்புத்
தம்பி
மண்ணிடை நாணுவானோ
பூப்போன்றபெண்ணினைப்
புதுப்புதுக் கேள்வி
கேட்டான்"

சமீபகாலத்தில் அடிக்கடி நிகழ்ந்துவந்த மின்சாரவெட்டு ஈழத்துக் கவிஞருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது எனலாம். புலவர் பார்வதிநாதசிவமும் மின்சார வெட்டைக்கருவாகக்கொண்டு தாக்கியல்கின்ற நகைச்சுவைக் கவிதை யொன்றைப் புனைந்துள்ளார். மின்சார வெட்டும் சம்சார சோகமும் என்ற அக்கவிதையின் ஒருபகுதி வருமாறு:

"வந்தது முகூர்த்தம் என்றே
மணமகன் தாலி கட்டும்
சிந்தையால் எழுந்த போது
திடீரெனக் "கறண்டு" நிற்க
அந்தரப் பட்டே ஈற்றில்
அவள் கையிற் கட்டிவிட்ட
விந்தைகள் தம்மைக்
கண்டோம்
மின்சார வெட்டினாலே."

அதிபரின் மோட்டார்வண்டி இன்னொரு சுவையான கவிதையாகும். ஒரு அதிபரிடம் ஒரு பழைய மோட்டார் வண்டி இருந்தது. அந்த வண்டிக்கும் விகடராமனின் குதிரைக்கும் அவ்வளவு வித்தியாசமில்லை.

"பள்ளிவிட்டதுமே அந்தப்
பழையமோட்டாரைச்
சேர்ந்தே
தள்ளமாணவர்கள் நிற்பர்
தள்ளியே வீடும் சேர்ப்பர்
கொள்ளரும் விலையில்
'பெற்றோல்
கொடும்விலை விற்றிட்டாலும்
தள்ளஆள் இருப்ப தாலே
தனித்துயர் அவரோ
கொள்ளார்"

அதிபரின் அந்த மோட்டார் வண்டி அவருக்குப் பல அதிட்டங்களைக் கொடுத்தது. அது வந்தபின்னரே அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. அதிபராக அவர் உயர்ந்ததற்கும் அதுவே தான் காரணம். இவை மட்டுமன்றி, "அது மோதிப் பிறவி நீங்கி அடைந்தனர் முத்தி பல்லோர்"

நகைச்சுவைக் கவிதையாக்கத்திற் புலவர் பார்வதிநாதசிவம் தேர்ந்து விளங்கியபோதிலும் கவிஞனுக்கிருக்கவேண்டிய சமுதாயச் சார்பை அவர் மறந்துவிடவில்லை என்பதை நூலின் பெயராக அமைந்த குறுங்காவியமான இரு வேறு உலகம் உணர்த்துகின்றது. இது வெறுங் காதற் குறுங்காவியமாயினும், புலவரது கருத்துக்களின் செழுமையை இது நிலைநிறுத்துகின்றது. கொழும்புச் சீவியத்திலிருக்கும் வீரசிங்கத்தின் மகன் சுந்தரத்துக்கும், அவரது வயலை மேற்பார்வை செய்யும் சுப்பையரின் மகள் சுமதிக்குமிடையே வளர்ந்த காதல் வீரசிங்கத்தால் தடுக்கப்பட்டு சுந்தரம் வெளிநாடு சென்றுவிடுகின்றான் சுமதி மனத்தைப் பக்தி நெறியிற் செலுத்தி, தன் வேதனையை மறக்க முனைகின்றாள், காதலின் தோல்வி சுமதியைத் துயர்ப்படுத்தியபோது, சுப்பையாவின் வாயிலாக வரும் வார்த்தைகளிற் சமுதாயத்தின் மேடுபள்ளத்தைக் கவிஞர் உணரவைக்கின்றார்.

"ஒருபெரும் உண்மையை
உணர்ந்துநீ கொள்வாய்
ஏழையர் செல்வர்
எனும்இரு பிரிவில்
இருவேறுலகம் இருந்திடல்
காண்பாய்......
இன்றுநேற் றன்று
பல்லாண்டாகக்
குன்றுநேர் செல்வரும்
குனிந்திடும் வறியரும்
இருப்பவே வையம்
இயங்குதல் காண்பாய்
காதல் என்பதும்
ஒற்றுமை என்பதும்
சமமாய்ப் பழகிடும்
சால்புதான் எனினும்
இருஉலகிற்கும்
இடையே தோன்றல்
இல்லை இல்லை
உணர்க என்மகளே."

இவை புலவர் பார்வதிநாதசிவத்தின் சமுதாயநோக்கைப் புலப்படுத்தி நிற்கின்றன;

## அந்தக் கவிதை

வாரமலரில் வெளிவந்த கவிதையொன்று வேறுஒருவரின் கவிதையின் பிரதியென்று அல்வாயைச் சேர்ந்தவாசகர் ஒருவர் சுட்டிக்காட்டி எழுதுகிறார். எழுத்துத்துறையில் முன்னேறவிரும்பும் இளம் எழுத்தாளர்கள் இவ்வாறு பிறர் ஆக்கங்களைத் திருடி [illegible] வாறு — இப்பழக்கத்தைக் [illegible] இன்றேம். (ஆ-ர்)

# அரசறிவியல் பயிலும் மாணவர்களுக்குஉகந்தநூல்

பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் திரு அம்பலவாணர் சிவராசாவினால் எழுதப்பட்ட "இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியும், மாற்றங்களும்" என்னும் நூல், அரசறிவியலை ஒரு பாடமாகக் கற்கும். மாணவர்களும், பல்கலைக்கழகத்தில் அப்பாடத்தைப் பயிலும் பட்டதாரி மாணவர்களும் இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியையும், மாற்றங்களையும் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலில் இலங்கையில் 1833ம் ஆண்டு முதல் 1978ம் ஆண்டு வரை (கோல்புறூக் முதல் இரண்டாம் குடியரசு வரை) ஏற்பட்ட அரசியல் திட்ட வளர்ச்சியும், மாற்றங்களும் பற்றி விரிவான அடிப்படையில் தெளிவான முறையில் கூறப்பட்டுள்ளமை இந்நூலாசிரியரின் அரசியற் புலமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இலங்கையின் தேசிய இயக்கத்தில் அரசியல் திட்டவாதிகளின் பங்கு, இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி (1833-1948), கோல்புறூக்—கமரென் சீர்திருத்தங்கள்-1833, குறூ—மக்கலம் சீர்திருத்தங்கள்-1910, மானிங் அரசியல் திட்டம், டொனமூ அரசியல் திட்டம்—1931- சோல்பரி அரசியல் திட்டம்—1947, முதலாம் குடியரசு அரசியல் திட்டம்—1972, இரண்டாம் குடியரசு அரசியல் திட்டம்—1978 ஆகியவற்றுடன் மற்றும் பல அரசியல் விடயங்களையும் உள்ளடக்கியதாக இந்நூல் உள்ளது.

அரசியல் திட்டம் என்றால் என்ன? அதன் தொழிற்பாடு யாவை? அரசியல் திட்டப் பாகுபாடுகள் எவை? என்பன போன்ற வினாக்களுக்கு இந்நூலில் விரிவான முறையில் பதிலளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தேசிய இயக்கத்தில் உயர்ந்தோர் குழாம் வகித்த பதவி பற்றி இந்நூலில் எவரும் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது, இலங்கையின் தேசிய இயக்க வரலாறு பற்றி அறிந்துகொள்பவர்களுக்குப் பயன்படத்தக்க முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

அண்மைக் காலத்தில் இலங்கையில் உருவாக்கப்பட்ட இலங்கைக் குடியரசின் அரசியல் திட்டம்—197 , இலங்கைச் சனநாயகச் சோஷலிசக் குடியரசின் அரசியல் திட்டம் 1978 ஆகிய இரு அரசியல் திட்டங்கள் பற்றியும், இந்நூலின் நான்காம், ஐந்தாம் அத்தியாயங்களில் விரிவாகத் தெளிவான முறையில் விளக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்கால அரசியல் திட்டம் பற்றியும், அதன் அம்சங்கள் பற்றியும் அறிந்துகொள்ள விரும்பும் எவரும் இந்நூலைப் பயன்படுத்துவது அவசியமானதாகும்.

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றியும் இந்நூலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இலங்கையின் ஜனாதிபதித் தெரிவுமுறை, ஜனாதிபதியின் அதிகாரங்கள், ஜனாதிபதியின் பதவி வெற்றிடம் போன்ற விடயங்கள் குறித்தும் இந்நூல் தெளிவான விளக்கத்தை அளிக்கின்றது.

அண்மையில் இலங்கையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை பற்றியும் இந்நூல் குறிப்பிடுகிறது. விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை என்றால் என்ன? அதன் முக்கிய அம்சங்கள் யாவை? போன்ற வினாக்களுக்கான பதிலை இந்நூலாசிரியர் [illegible] விபர அட்டவணை மூலம் விளக்கியுள்ளார்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை பற்றி அறியாத ஒருவர் அதுபற்றித் தெரிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவுவதாக அமைந்துள்ளது.

தமிழில் அரசறிவியலை ஒரு பாடமாகப் பயிலும் பாட

(9ம் பக்கம் பார்க்க)

## தடுமாற்றம்

— முருகையன் —

ஒரு சில ஆண்டின் முன்னால்
உண்மை, பொய், நன்மை, தீமை
சரி பிழை அறிந்திருந்தோம்
சயிக்கிளும்
லயிற்றில்லாது
தெருவிலே இறங்க மாட்டோம்;
இக்கற்றுக் கையில் இன்றி
வருவமோ கூத்துப் பார்க்க?
வழக்கனை விலக்கி வைத்தோம்.

ஒரு சில ஆண்டின் முன்னால்
வழக்கனை விலக்கி வைத்தோம்.

இப்பொழுதெல்லாம்
நம்முள்
எதற்குமே தடுமாற்றம் தான்
அப்பிழை
நீண்ட ஞாய ஆய்வினால்,
சரியாய்ப் போகும்.
இப்பெருஞ் சரியும்
நீதி இழுபறி வாதத்தாலே
முப்பது மடங்கு
தீய
முழுப்பிழை ஆதல் கூடும்.

பாழு மன்றுகளில்,
சட்டம்
பாகு பண்ணுவதால் மட்டும்
நாளைய ஆள்வார் தம்மை
நாம்
சிறைப்படுத்தல் கூடும்.

எழு குன்றுகளில் ஏறி
எழுப்பமாய் முழங்கிச் சத்தம்
போடுகின் றதனால்,
பச்சைப் பொய்களும்
மெய்யாய் மாறும்

ஒரு சில ஆண்டின் முன்னால்
உண்மை, பொய் தெரிந்திருந்தோம்
இப்பொழு தெல்லாம் நம்முள்
எதற்குமே தடுமாற்றம் தான்.

கோழிப் பண்ணையில் இலாபம் பெற டயமிக்ஸ்
டயமிக்ஸ் - அமெரிக்காவில் டயமண்ட் ஷம்றொக் ஸ்தாபனத்தினால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட பெறுமதிமிக்க இத் தீனி உயர்ரக விட்டமின்களும் தாதுப்பொருள்களும் கொண்டது. விலையோ சகாயம்.
முட்டைக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 20/90
குஞ்சுக் கோழி ஆரம்பத் தீன்,
இறைச்சிக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 21/90
25 கிலோ கிராம் பைகளிலும் கிடைக்கும்
இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்
மாஸ்டர் ஃபீட்ஸ் லிமிட்டெட்
30, ஃபிரேஸர் அவனியூ, தெஹிவளை. தொலைபேசி: 071-5123
இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கும்.
டயமிக்ஸ்—இலாபம் தரும் கோழிப்பண்ணைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண் விஞ்ஞானக் கலை மூலம்
# உங்கள் பிறந்த கிழமையை எப்படிக் கண்டு பிடிக்கலாம்?

தமது பிறந்த கிழமை (நாள்) பலருக்குத் தெரியாது. பிறந்த வருடம், மாதம், திகதி மட்டும் தெரியும். ஆனுல் பிறந்த நாள் தெரியாது. இப்படிப்பட்டவர்களுக்குப் பிறந்த நாட் பலனை எப்படிக் கூற முடியும்? ஒருவர் பிறந்த வருடம், மாதம், திகதி மட்டும் தெரிந்தாற்போதும்; அவருடைய பிறந்த நாளைக் குறிப்பாகச் சொல்லமுடியும். இதற்கும் எண்கள்தான் பயன்படுகின்றன. இதற்கும் ஒரு வழிமுறை இருக்கிறது. அதைக் கீழே விளக்குவோம்.

### வருடங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | | 4 | 5 |
| 6 | 7 | | 8 | 9 | 10 | 11 |
| | 12 | 13 | 14 | 15 | | 16 |
| 17 | 18 | 19 | | 20 | 21 | 22 |
| 23 | | 24 | 25 | 26 | 27 | |
| 28 | 29 | 30 | 31 | | 32 | 33 |
| 34 | 35 | | 36 | 37 | 38 | 39 |
| | 40 | 41 | 42 | 43 | | 44 |
| 45 | 46 | 47 | | 48 | 49 | 50 |
| 51 | | 52 | 53 | 54 | 55 | |
| 56 | 57 | 58 | 59 | | 60 | 61 |
| 62 | 63 | | 64 | 65 | 66 | 67 |
| | 68 | 69 | 70 | 71 | | 72 |
| 73 | 74 | 75 | | 76 | 77 | 78 |
| 79 | | 80 | 81 | 82 | 83 | |
| 84 | 85 | 86 | 87 | | 88 | 89 |
| 90 | 91 | | 92 | 93 | 94 | 95 |
| | 96 | 97 | 98 | 99 | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |

ஒருவரின் பிறந்த வருடம், மாதம், திகதியைக் கொண்டு அவர் பிறந்த கிழமை இன்னதென்று கண்டுபிடிக்க வழி, இதில் 1901ம் ஆண்டு முடிய உள்ள வருடம், மாதம், திகதியைக் கணக்கிட வசதிசெய்யப்பட்டிருக்கிறது. ஒருவருடைய 99-வது வயது வரை இந்த வகையில் பிறந்த கிழமையைத் தெரிந்துகொள்ளலாம்.

ஆனுல், இந்த வகைக்குப் பயன்படுத்தும் எண்களைத் தவருக எழுதிவிட்டால் கிழமையும் தவருகவே வரும், ஆகையால் ஒவ்வொரு முறையும் எண்களைச் சரிபார்த்த பிறகுதான், சரியாகக் கூட்டி வரும் எண்ணைக்கொண்டு வாரத்தின் ஒரு நாளைக் கண்டுபிடிக்கவேண்டும். ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு எண்ணும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன.

### மாதங்கள்

ஜனவரி-2 ஜூலை-1
பெப்ரவரி-5 ஆகஸ்ட்-4
மார்ச்-5 செப்டம்பர்-0
ஏப்ரல்-1 அக்டோபர்-2
மே-3 நவம்பர்-5
ஜூன்-6 டிசம்பர்-0

சூட்சும எண், வருட எண், மாத எண், பிறந்த திகதி என்பவற்றைக் கூட்டி வரும் தொகையை 7ஆல் வகுக்கும் பொழுது வருகின்ற மிகுதி எந்த இலக்கத்தில் இருக்கின்றதோ அந்த எண் குறிப்பிடும் கிழமைதான் ஒருவர் பிறந்த நாளாகும்.

### கிழமை நாட்கள்

1-சனி 5-புதன்
2-ஞாயிறு 6-வியாழன்
3-திங்கள் 0-வெள்ளி
4-செவ்வாய்

ஒருவர் 1947ம் வருடம், ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி பிறந்ததாக வைத்துக்கொள்வோம். அவர் எந்தக் கிழமையில் பிறந்தார் என்பதைக் கண்டுபிடிக்க முதலில் ஒரு சூட்சும எண்ணைப் பயன்படுத்தவேண்டும். இந்த எண்ணை (6) ஒவ்வொருவருக்கும் தவருமல் முதலில் போடவேண்டும். இல்லையெனின் கிழமை கண்டுபிடிக்க முடியாது பின்புஅவர் பிறந்தவருடத்தின் முதல் இரண்டு எண்களை நீக்கிவிட்டு, அடுத்த இரண்டு எண்களைக் கவனிக்கவேண்டும். இப்பொழுது 1947ல் முதல் இரண்டு எண்களை நீக்கிவிட்டால் இருப்பது 47. இப்போது வருடங்கள் என்ற கட்டங்களில் 47 எங்கே இருக்கிறதென்று பார்க்கவேண்டும்.

மேலிருந்து கீழாக ஒன்பதாவது வரிசையில் 47வது எண் இருக்கிறது. இதைக் கண்டுபிடித்த பின் நேராக வேறொன்றையும் கவனியாமல், அந்த இடத்திலிருந்து கோடு தவருமல், அதே கட்டத்தின் வழியாக மற்றக் கட்டங்களைத் தாண்டிக் கீழே இறங்கவேண்டும். இப்படி இறங்கினுல் கீழேயுள்ள எண் வரிசையில் 3வது எண்ணிற்கு நேராக வந்து நிற்கும். இப்போது இந்த எண் 3ஐ எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு சூட்சும எண் 6; வருட எண் 3 என்று எழுதிக்கொண்டு, மாதங்கள் என்ற வரிசைக்கு வரவேண்டும். இவர் பிறந்தது ஆகஸ்ட் மாதம். எனவே ஆகஸ்ட் மாதத்தைக் கவனித்து அதற்கு நேராக உள்ள எண் 4 என்பதை எடுத்துக் கொண்டு, வருட எண்ணுக்குக் கீழ் இதை எழுதவேண்டும். பின்பு அவர் பிறந்த திகதி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். பிறந்த திகதி 26; எனவே,

| | |
|---|---|
| சூட்சும எண் | 6 |
| வருட எண் | 3 |
| மாத எண் | 4 |
| பிறந்த திகதி | 26 |
| | 39 |

இப்போது கூட்டுத்தொகை 39. ஒவ்வொருவருடைய பிறந்த நாளைக் கண்டுபிடிக்க இந்த விதமாக வரும் மொத்தக் கூட்டுத் தொகையை 7ஆல் வகுக்கவேண்டும்.

7 ) 39 (
35
4

39ஐ 7ஆல் வகுத்ததில் மீதம் 4 வந்தது. ஒவ்வொரு நாளுக்கும் ஒரு எண் தரப்பட்டுள்ளது. எனவே இந்த எண் 4 செவ்வாய்க்கிழமையைக் குறிக்கின்றது. 26-8-1947ம் ஆண்டு பிறந்த ஒருவர், செவ்வாய்க்கிழமையில் பிறந்திருக்கிறரென்று கண்டுபிடித்துவிடலாம். இந்த வகையில் பிறந்த வருடம், மாதம், திகதி தெரிந்தவர்களுக்கு அவர்கள் பிறந்த கிழமையைச் சரியாகக் கூறிவிடலாம்.

சோதிடர்
**ஆ. சிவராசா**
வேலணை

---

(9)

## மூவர் எழுதும் குறுநாவல்
# பூ நாகம்!

சிங்கப்பூர்ப் பெருச்சாளி குழி பறிக்கத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தது. பாக்கியம் குமார் கல்யாணப் பேச்சுக்களை துரிதகதியில் நடத்தினுர். சரசம்மாளிடம் இருந்து அதிக சீதனம் பெறமுடியாது என்று தெரிந்தும், சிங்கனைப் பழிவாங்க ஞானம்மாக்காவின் கதையொன்றையே வைத்து முயற்சித்தார். எனக்கு மூக்குப்போனுல் பறவாயில்லை. சிங்கனுக்கு சகுனம் நல்லாயிருக்கக்கூடாது, சிங்கன், பாக்கியம் தொடர்பைப் பற்றி புழுதி தூற்றினுர். 'பாவம்', சிங்கனை மனத்தில் வரிந்துகொண்டவளை, ''மனத்தால் இரண்டாம் தாரத்தை'' தன் மகனுக்கு சோமையர் கட்டிவைத்

மீண்டும் தொடர்கிறார்
**வடகோவை வரதராஜன்**

தாரே என்று இதே ஊர் கதைத்துச் சிரிக்கும் என்பதை மறந்தார். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டம்தானே! கலியாணப்பேச்சு உக்கிரம் அடைய பாக்கியம் புழுவாய்த் துடித்தாள். அபலைப்பெண் என்ன செய்வாள்? சிங்கனையும் இப்போது சந்திக்கமுடிவதில்லை. கடியெறும்பு பட்ட மண் புழுவாகத் துடித்தாள். வெண்ணுவல்மரத்து நாச்சிமாரை நெஞ்சுருக வேண்டிக்கொண்டாள். அந்த நாச்சிமார்த் தெய்வம் இருப்பது உண்மையானுல் தான் சிங்கனை மனமாரக் காதலித்தது உண்மையானுல் தங்கள் கலியாணம் நடக்கும் என்று நம்பி மனதைத் தேற்றினுள்.

பக்கத்து வீட்டுக் கமலாவிடம் கொப்பிப் பேப்பரில் பென்சிலால் தன் மன உளைவுகளைக் கிறுக்கி செம்பாட்டுக்குள் புல்லறுக்கப் போகும் போது சிங்கனிடம் கொடுத்து விடும்படி கொடுத்துவிட்டாள்.

சீனி கட்டிவைத்த பையைக் கிழித்து அதில் சிங்கன் ''ஒன்றுக்கும் பயப்படவேண்டாம், நாச்சிமாரை வணங்கும்'' என்று கிறுக்கிக் கொடுத்துவிட்டான்.

இனி நேரடி நடவடிக்கையில் இறங்கவேண்டும், ஏதாவது செய்தால்தான் பாக்கியத்தை காப்பாற்றமுடியும், காத்திருந்தவன் பெண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டு போவதா?' யாரின் துணையை நாடுவது அவன்? அந்த ஏழைக்கு கைகொடுப்பவர் யார்? நாச்சிமார்சுவாமி வருமா? பாவம் அவளும் ஏழையாக மழையில் நனைந்து வெய்யில் காய்ந்து உதிர்ந்த சருகுகளால் அர்ச்சனை செய்யப்பட்டு தேடுவாரற்றுக் கிடக்கிறுளே. அவளா இவளைக் காப்பாற்றப் போகிருள்? அவன் மனதில் காதல் துளிர்க்கக்கூடாதா? இந்த உலகில் ஏழைகள் காதலிக்கவே கூடாதா?

அவனுக்கு நம்பிக்கை தருபவராக சுந்தரத்தார் மட்டுமே தெரிந்தார். சுந்தரத்தார் காதில் தன் கதையைப் போட்டுவைத்தான்.

சுந்தரத்தார் சிந்தித்தார். இதில் தன் பங்கு எவ்வளவு பொறுப்புவாய்ந்தது என்பது அவருக்குப் புரிந்தது.

தனக்கு எதிராக சிங்கனைத் தூண்டிவிட்டவர் சுந்தரத்தார் தானென்று சோமையர் புழுதி வாரி இறைப்பார் என்பது அவருக்குப் புரியாததல்ல, அத்தோடு நில்லாமல் ஒரு செம்பாட்டான், சோட்பாய்க் கிராய்ப்பகுதியில் டென் எடுப்பதா? என்று பிரதேசவாதப் புரளியையும் கிளப்பிவிடுவார் என்பதும் அவருக்குத்தெரியும். சோதி தன் குடும்பத்திற்கும் தனக்கும் தலைகுனிவு ஏற்படுத்த சுந்தரத்தார் முயல்கிறுர் என்று முறைப்பான் என்பதும் தெரியும். ஞானமக்கா ஊர்முழுக்க மீன் தண்ணி தெளிப்பாள் என்பதும் தெரிந்தும் அவர் இவர்களுக்கெல்லாம் முகம்கொடுக்கத் துணிந்தார். எதற்காக; ஓர் உண்மை நெஞ்சத்திற்காக, ஓர் உத்தம ஏழைக்காக, உண்மைக் காதலால் உருகும் சோடிப் புருக்களுக்காக, அவருக்குத் தெரியாதா காதலின் பெருமை. அருமை. எருப்பார்க்க என்றும், குப்பை வாங்க என்றும், இடாய் பார்க்க என்றும் சாவல் வாங்க என்றும் அவர் எத்தனை முறை தன் திருமணத்திற்கு முன்பு தன் மனைவி (முன்பு காதலி) பரிமளம் வீட்டிற்கு போய் அவளைத் திருட்டுத்தனமாகப் பார்த்திருக்கிறுர்.

அவருக்கு காதல் மனதின் உணர்வுகளைப் புரியவில்லை என்ருல் வேறு யாருக்குப் புரியப் போகிறது?

அவர் சிந்தித்தார்........ சிந்தித்தார். மனக் குழப்பங்களுக்கு இடம் வைக்காமல் தெளிவாக சிந்தித்தார். அப்பாடா விடைகண்டுபிடித்துவிட்டார்.

சுந்தரத்தார் குமாரைச் சந்தித்து விஷயத்தை காதில் போட்டுவிட்டார். குமாருக்கு சுந்தரத்தார்மீது நல்ல அபிமானம். சிறுவயதில் இவரிடம் தான் அ, ஆ படித்தவன்.

ஒருநாள் செம்பாட்டு ஒழுங்கையால் குமார் சைக்கிளில் போகும்போது சிங்கன் பனை வளவிற்குள் மாடுகளை மேய விட்டு ஓர் தனிப்பாறையில் நாடிக்குக் கைகொடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டான். அவனின் கோலம் அவனின் புனிதமான காதல் உணர்வு குமாரை உருக்கிவிட்டது.

பிறேக்கைப் பிடித்து சைக்கிளை நிறுத்தினுன்.

(தொடரும்)

---

### 3 கோடி பிரதிகள் விற்பனை

'றீடர்ஸ் டைஜஸ்ட்' என்ற மாதாந்த சஞ்சிகை மாதாந்தம் 3கோடி பிரதிகள் விற்பனையாகின்றன. 15 மொழிகளில் இச்சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

---

# மானினம் வகுத்த வாழ்வு

'அகளங்கன்'

அடர்ந்த ஓர் மணற்பரப்பில்
அடுக்கிய முள் மரங்கள்
படர்ந்திள முல்லை இல்லை
பசுமையோ எங்கும் இல்லை.

ஆதவன் சீற்றத்தாலே
அம்மணற் பரப்பு வெந்து
கானலாய்க் கொதித்திருந்த
காட்சியைக் காணினுள்ளம்
வெந்துயிர் பதைபதைத்து
மேனியை எரிக்குமம்மா!

அந்தஅப் பாலைதன்னில்
அன்பொடு கூடிவந்த
இன்பமான் சோடியொன்று
இணைந்திணைந் தோடிவந்து

களைப்பிலே உடலம்வாடிக்
காலினில் வெப்பம்கூடத்
துடித்தது துடித்தும் நில்லா
தோடிய தெங்கெல்லாமோ.

தாகத்தின் எல்லையிலே
தாரமும் தானுமாக
தேடியதங்கே, 'தண்ணீர்
தெரிந்தது சிறுபள்ளத்தில்.

கலையுமப் பிணையுமொன்ருய்த்
தாகமே தணிப்பதற்கோ
தண்ணீரின் அளவுபோதா
திருந்தது கண்டதம்மா.

தாரத்தின் முகத்தையந்த
மான்கலை நோக்கிமீளப்
பிணைமானின் விழியுமன்புக்
காதலில் கலையை நோக்கும்.

பருகிடு தண்ணீரென்று
பகர்ந்திடும் கலைசண் வீச்சால்
அருந்திடும் அன்பேயென்று
அந்தமான் பிணையுஞ்சொல்லும்.

இறுதியில் இரண்டுமொன்ருய்
வைத்தது வாய்தண்ணீரில்
இருந்தது அளவுமாறு(து)
அப்பாலை வனத்துத்தண்ணீர்.

மானிடர் வாழ்வுக்கிந்த
மானினம் வகுத்தவாழ்வில்
மானினம் வகுத்த வாழ்வே
வளருயிர் அன்பு வாழ்வாம்.

(குறுந்தொகையில் வரும் பாடலின் அடிப்படையில் எழுதப்பட்டது).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RANEE** (Jaffna) Daily 3 Shows at 10-30 a.m, 2-30, and 6-30 p.m.

Omar Sharif, Alec Guinness, Rod Steiger, Ralph Richardson in

DAVID LEAN'S FILM


**"DR. ZHIVAGO"**

(Winner of 6 Academy awards)

**ராஜா** (யாழ்ப்பாணம்)

ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்

(தினசரி 4 காட்சிகள்)



**சுப்பிரபாதம்**

(ஈஸ்ட்மன் கலர்)

வெற்றி முழக்கமிடும் 9-வது வாரம்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)

தினசரி 4 காட்சிகள்

ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த

**மீனவ நண்பன்**

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

''நாங்கள் இரண்டுபேரும் மனம்விட்டுப் பேசியதில் இருந்து எங்களுடைய மனம் எவ்வளவு இலேசாகி விட்டது என்று பார்த்தீர்களா? அந்தக் கடிதத்தை என்மீது உண்மையிலே அன்புவைத்திருக்கும் ஒரு சிநேகிதிதான் எழுதியிருந்தாள். நீங்கள் கூறியபடி உண்மையிலே திருந்திவிட்டால் நிச்சயம் அவள் சந்தோஷப்படுவாள்.'' சுமதி அப்படிக்கூறியதும் சந்திரன் ''ஒரு மனைவி நினைத்தால் குடும்பத்தைச் சொர்க்கமும் ஆக்கலாம் நரகமும் ஆக்கலாம்.'' நீ எப்படிச் செய்வாயோ! என்று கூறி அவளைத் தன்னோடு அணைத்துக்கொண்டான்.

(யாவும் கற்பனை)

## அரசறிவியல்..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலை மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் தமிழில் அதுபற்றிய நூல்கள் அறிமுகமில்லாத இச்சந்தர்ப்பத்தில் திரு. அ. சிவராசாவினல் எழுதப்பட்ட இந்நூல் அவர்களுக்குப் பெரிதும் உதவுமென்பதில் ஐயமில்லை.

இந்நூலில் வரும் அடிக்குறிப்புக்கள், நூலாசிரியர் பல அரசியல் நூல்களை நுணுக்கமாக ஆராய்ந்தே இந்நூலை எழுதியுள்ளார் என்பதற்குச் சான்று பகர்கின்றன.

கையடக்கமாக, தெளிவாக அழகான முறையில் சுன்னாகம் திருமகள் அச்சகத்தினரால் அச்சிடப்பட்ட இந்நூற் பிரதியொன்றின் விலை 12 ரூபாவாகும்.

அரசறிவியல் பற்றிக் கற்கின்ற, அறிய விரும்புகின்ற ஒவ்வொருவரிடமும் இந்நூல் அவசியம் இருக்கவேண்டும்.

**தி. வெற்றிவேலுப்பிள்ளை**

**வெஸ்லி** (மாவிட்டபுரம்)

தினசரி 6-30, 9-30, சனி-ஞாயிறு 2-30

ரவிச்சந்திரன்- கல்பனா

**மதராஸ் டு பாண்டிச்சேரி**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30 சனி-ஞாயிறு 2-45

**ஞானக்குழந்தை**

**ஹரன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவகுமார்-சுஜாதா

**அன்னக்கிளி**

(புதிய பிரதி)

# பனல்டி மூலம் ஸ்கந்தா வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தி வரும் உதைபந்தாட்ட 3ம் பிரிவு அரை இறுதிப் போட்டியில், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை, ஒரு கோலால் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளது.

போட்டி ஆரம்பமாகி இறுதி வரை இரு கல்லூரிகளும் மிகவும் சிறப்பாக விளையாடினர். ஆனால் இரு கல்லூரிகளும் வழங்கப்பட்ட நேரத்தில் ஒரு கோலையும் போடாததால் மேலும் 10 நிமிடங்கள் வழங்கப்பட்டு அப்பொழுதும் ஒரு முடிவும் ஏற்படாததால் 'பனல்டி' உதை வழங்கப்பட்டது. இதில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஒரு கோலால் வெற்றியீட்டியது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் தலைவர் மதிவதனன், திவாகரன், எஸ், ஜெயக்குமார், என். ஜெயக்குமார், மனோகரன் ஆகியோர் சிறப்பாக விளையாடினர்கள். மகாஜனக் கல்லூரி சார்பில் தலைவர் அ. உதயகுமார் சிறப்பாக விளையாடினர். திரு. சிவராசா சிறந்த முறையில் மத்தியஸ்தம் வகித்தார்.

## தற்கொலை

(புலோலி)

ஐந்து பிள்ளைகளின் தந்தையொருவர் மது போதையில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்துகொண்ட சம்பவமொன்று வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

தம்பிமுத்து ஆனந்தன் (வயது 32) என்ற மீன்பிடித் தொழிலாளியே மதுபோதையில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டவராவர். இவரது மரணவிசாரணையின்போது இறந்தவரின் மனைவியான கமலாவதி (வயது 31) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''எங்களுக்கு ஐந்து பெண் பிள்ளைகள் இருக்கின்றார்கள். இறந்த எனது கணவர் மீன்பிடித்தொழில் செய்து வந்தார். சம்பவதினம் பகல் 12 மணியளவில் எனது கணவர் தொழிலால் வந்தார். மதுபோதையுடனே காணப்பட்டார். வந்தவர் எனக்கு அடித்தார் நான் ஒடி ஒளிந்துகொண்டேன். பின்னர் பிள்ளைகளுக்கும் அடித்தார். அவர்களும் ஓடிவிட்டனர். மாலை 6மணியளவில் எனது மகள் வீட்டிற்கு விளக்கு ஏற்றச் சென்றார். சென்றவர் ''ஐயோ அம்மா ஐயா கயிற்றில் தொங்குகிறார் என்று குளறிக்கொண்டு ஓடிவந்தார். நான் ஓடிச்சென்று பார்த்தபோது எனது கணவர் சுருக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்தார். நான் குளறிக்கொண்டு றோட்டுப்பக்கமாக வந்தபோது அங்கு பொலிஸ் ஜீப் வண்டி ஒன்று வந்தது. அந்த ஜீப்பிலிருந்த பொலிசாருக்கு விபரத்தைச் சொன்னதும் அவர்கள் வந்து சுருக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்த எனது கணவரைக் கயிற்றிலிருந்து நீக்கிக் கீழே கிடத்தினர் அவர் இறந்து விட்டார்'' என்றார்.

மரணவிசாரணையை மேற்கொண்ட வடமராட்சிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. தி. வேலுப்பிள்ளை (ஜே. பி) தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

## மீண்டும் 'சங்காரம்'

நாடக, அரங்க கல்லூரி தயாரித்து 15-11-80ல் வீரசிங்கம் மண்டபத்தில் ரசிகர் அவைக்காகமேடையேறியசி. மௌனகுருவின் ''சங்காரம்'' என்னும் மட்டக்களப்பு வடமோடிக் கூத்துச்சார்ந்த நவீன நாடகம் மீண்டும் 30-11-80) இன்று மாலை 6-45க்கு வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறுகிறது.

சி. மௌனகுரு எழுதிநெறிப்படுத்தும் இந்த நாடகம் ஈழத்தின் தமிழ் நாடக வரலாற்றில் முக்கியமானதோர்திருப்புமுனையாக முன்பே அமைந்துவிட்டது. அது மீண்டும் நாடக அரங்கக் கல்லூரியால் மேடையேற்றப்படுவது அனைவரும் விரும்பத்தக்கதாகும். காத்திரமான நாடக வளர்ச்சியில் தீவிரமாக உழைத்துவரும் நாடக அரங்கக் கல்லூரியின் பணிக்குப் பொது மக்கள் ஆதரவு இருந்து வருவதையும் நன்கு அவதானிக்கக் கூடியதாய் இருக்கிறது.

'சங்காரம்' நாடகத்துக்கு இலங்கையின் பிரபல மெல்லிசைக் கலைஞர் கண்ணன் இசை அமைத்துள்ளார். 'பொறுத்தது போதும்' உட்பட நாடக அரங்கக் கல்லூரியின் நாடகங்கள் அனைத்துக்கும் 'கண்ணனே' இசை அமைத்து வருகிறார். கண்ணன் போன்ற திறமை மிக்க முன்னணிக் கலைஞர்கள் இத்தகைய முயற்சிகளுக்கு உதவுவதுஅவர்களின் ஆர்வத்தையும் நாடகத்தின்பால் அவர்களுக்குள்ள பற்றுதலையும் காட்டுகிறது.

**ஓர் அன்பர்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜனத்திரள் நிறைந்த 3வது வாரம்

தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45

மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் ★ புன்னகை அரசி சீமா ★ கே. ஆர். விஜயா

நாட்டியப் பேரொளி பத்மினி ★ வி. கே. ராமசாமி ★ மனோரமா

விதுபாலா ★ ரீனு ★ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆலபரட் ★ மார்ஷல் மற்றும் பலர் ஜொலிக்கும்

**ஒரே வானம் ஒரே பூமி**

(வண்ணக்கலர்)

இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.

ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.

சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப் படத்திலும் காணக்கிடைக்காத பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.

**வெலிங்டன்** (யாழ்நகர்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - சரோஜாதேவி

**பாலும் பழமும்**

**லிடோ** (யாழ்நகர்)

தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30

**Black Sunday**

**வின்ஸர்** (யாழ்நகர்)

தினசரி 10-30, 2-30, 6-15, & 9-30

முத்துராமன் - ஜெயலலிதா-எம்.ஆர். ஆர். வாசு நடித்த

**சூரிய காந்தி**

**SANTHI** Jaffna - 10-30, 2-15, 4-45, 7-15 & 9-45

TATUM O'NEAL. CHRISTOPER PLUMMER

**International Velvet**

A Family Entertainment With suspense 'color'

1-12-80 "DIRTY DOZEN"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வனேஸ்ட் நெளிவுள்ள
கூரைத்தகடுகள்
35 U S G & 32 U S G
நீளம் 6 அடி முதல் 10 அடிவரை
சி ஐ சி பெயின்ற் வகைகள்

கதிர் ஹாட்வெயர்ஸ்
(TILLY'S GROUP)
11/1-2, ஸ்ராங்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7130

# உழவு இயந்திரத்தில்சென்ற இளைஞர் அதன் சில்லுக்குப் பலி!

(புலோலி)

உழவு யந்திரத்தில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவருக்கு அந்த இயந்திரத்தின் சில்லுகளே யமனாகியது.

மந்திகையில் நடந்த இச்சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த நமசிவாயம் யோகநாதன் என்ற 27 வயது இளைஞர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் ஸ்தல விசாரணை நடத்தி, மரண விசாரணை அதிகாரி திரு. ரி. வேலுப்பிள்ளையை மரணவிசாரணை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (இ)

சிறப்பு விற்பனை

வைபவங்களில் பரிமாறுவதற்கும், திருமண நிகழ்ச்சிகளின் போது, தாம்பூலம் போட்டுக்கொடுப்பதற்குமேற்ற பொலித்தீன்பைகள், மற்றும் எல்லா சைஸ் பொலித்தீன் பைகளுக்கும், ஒரே விற்பனையாளர்,

சிக்கோ டிரேடர்ஸ்

13, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

ஆந்திராவில் நடைபெறும்

# 2-வது உலக நாத்திகர்மகாநாடு

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக ஏத்தீஸ்ற் மாநாடு, அடுத்த மாதம் 25ந் திகதி தொடக்கம் 28ந் திகதி வரை ஆந்திரப் பிரதேசத்திலுள்ள விஜயவாடாவில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டின் போது அகில உலகிலுமுள்ள நாஸ்திகர்களும், சமுதாய மாற்றத்தினை விரும்பும் இயக்கங்களின் பிரதிநிதிகளும் பெருமளவில் பங்குகொள்ளவுள்ளனர்.

விஜயவாடாவில் இயங்குகின்ற ஏத்தீஸ்ற் நிலையத்தின் அதிபர் திரு. லவணம் கடந்த வருடம் இலங்கைக்கு விஜயஞ் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாநாட்டில பங்குகொள்ளும்படி இங்குள்ள சில இயக்கங்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

திரு. லவணம், அறவழிப் போராட்டக் குழுவின் விருந்தினராக இங்கு தங்கியிருந்தமை கவனிக்கத்தக்கதாகும்.

## பேர்ஸ் யாருடையது

நாவலர் வீதியில் ஈழநாடு ஊழியர் திரு. அருளானந்தத்தால் கண்டெடுக்கப்பட்ட மகளிர் பேர்ஸ் ஒன்று எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் கூறிப் பெற்றுக்கொள்ளலாம். (ஆ-ர்)

## தமிழ் மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தரணி திரு இராசா விசுவநாதன் ஆட்சேபித்தார்.

தமக்கு மட்டுமன்றி, எதிரிகளுக்கும் புரியாத சிங்கள மொழியில் வரைபடம் இருப்பதால், விசாரணை தொடர முடியாமல் இருப்பதாகக் கூறிய சட்டத்தரணி, எனக்குப் புரியாத மொழியில் வரைபடம் இருப்பதால், ஆட்சேபிப்பதாகவும், இதனைப் பதிவு செய்யவேண்டுமென்றும் தமக்குத் தமிழ் மொழிபெயர்ப்புத் தரப்படவேண்டுமென்றும் கூறினார்.

வரைபடம் தயாரித்தவருக்குத் தமிழ் தெரியாதென்றும், ஆதலால் தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கமுடியாதிருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

நீதிபதி ஆட்சேபத்தை ஏற்றுக்கொண்டு, தமிழ்மொழி பெயர்ப்பு வழங்குமாறு பணித்து விசாரணையை டிசம்பர் 5ந் தேதிக்கு ஒத்திவைத்தார். (கு)

# இலங்கையருக்கு சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு

## சிங்கை அரசின் புதிய திட்டம்

(கொழும்பு)

சிங்கப்பூரில் இலங்கைக் கட்டிடத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

கட்டிடத் தொழிலாளர்களுக்கு சிங்கப்பூரில் ஏற்பட்டுள்ள பற்றுக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இலங்கையிலிருந்து தொழிலாளர்களைத் திரட்டுவதற்கு ஒப்பந்தகாரர்களுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாறு திரட்டப்படும் தொழிலாளர்கள் தொடர்பாக சிங்கப்பூர் அரசாங்கம் பல நிபந்தனைகளையும் விதித்துள்ளது. அவை வருமாறு;

★ நான்கு வருடங்களுக்கு மட்டுமே ஒப்பந்தம் வழங்கப்படும். ஒப்பந்தம் முடிவடைந்ததும் தொழிலாளர்களை அவர்களது நாட்டிற்கு திருப்பிஅனுப்பும் பொறுப்பு ஒப்பந்தகாரர்களுக்கே உரியது.

★ ஒவ்வொரு தொழிலாளருக்கும் மாதமொன்றுக்கு 230 டாலரை அரசுக்குவேலைகொள்வோர் வழங்கவேண்டும்.

★ சிங்கப்பூர் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தைப் போலவே வெளிநாட்டவருக்கும் சம்பளம் வழங்கவேண்டும்.

★ 16 முதல் 60 வயது வரையிலான தொழிலாளர்களையே அனுப்புமாறு சிங்கப்பூர் அரசு கேட்டுள்ளது. (இ-கு)

## வலி. கிழக்கு ப. நோ. கூ. ச.

# நெறியாளர் குழு கூட நீதிமன்றம் தடை

(அச்சுவேலி)

வலிகிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குனர் சபையின்மீது நீதிமன்றத்தினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 22ந் திகதி மேற்படி சங்கத்தின் பொதுச்சபையால் தெரிவுசெய்யப்பட்ட ஏழு நெறியாளர் குழுவினரின் தெரிவும் செல்லுபடியாகாதென்றும், இதனால் நெறியாளர் குழு கூடுவதைத் தடைசெய்யுமாறும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தடைமனுவின்மீது இக்குழுவுக்கெதிராக மல்லாகம் நீதிபதியினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமைஇப்புதிய குழு இச்சங்கத்தின் தலைவர், உபதலைவர் ஆகியோரைத் தெரிவுசெய்வதற்குக் கூடிய போதுகூட நீதிமன்றில் தடை உத்தரவு வழங்கப்பட்டதால் புதிய இயக்குனர்சபையும் இக்கூட்டத்திற்கு வந்திருந்த கூட்டுறவு ஆணையாளரும் கலைந்து சென்றனர்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. செ. ஞானப்பிரகாசம் தலைமையில் இக்குழு கூடவிருந்தது.

செல்லப்பா இரத்தினம், இளையவன் மயில்வாகனம் ஆகியோரால் இந்த இடைக்காலத்தடை மனு தாக்கல் செய்யப்பட்டது. மல்லாகம் நீதிபதி திரு. சி. ஆர். இராசசிங்கம் இத்தடை உத்தரவை விதித்தார்.

கூட்டுறவு ஆணையாளருக்கு எதிராகவும் மேற்படி சங்கத்திற்கு எதிராகவும், சங்க செயலாளருக்கெதிராகவும் இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

சட்டத்தரணி இ. சீவரத்தினத்தின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி எம். எஸ். சுந்தரலிங்கம் இம்மனுதார் சார்பாக ஆஜராகி வாதிட்டார். (வண்-நிருபர்)

## அரிசியை மொத்தமாக...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அவரின் பணிப்பின் பேரில் சில்லறை விற்பனை நிலையத்திற்குச் சென்று சோதனையிலீடுபட்ட உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் காமினி திசாநாயக்கா, கான்ஸ்டபிள் கிட்ணர் ஆகியோர் அங்குள்ள கணக்கின்படி 15 குத்தரிசி மூடைகள் குறைவாக இருப்பதாகக் கண்டு பிடித்தனராம். அதைத் தொடர்ந்து அதே வீதியி அமைந்துள்ள தனியார் கடை ஒன்றைச் சோதனையிட்டபோது அக்கடையில் இருந்து இச்சில்லறை விற்பனை நிலையத்திலிருந்து விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் அரிசிமூடைகளைக் கைப்பற்றினர்.

பொலிசாரால் கைப்பற்றப்பட்ட அரிசிமூடைகள் யாவும் மேற்படி சில்லறை விற்பனை நிலையத்திற்குச் சொந்தமானவைதான் என அதன் பொது முகாமையாளர் திரு, அப்பாக்குட்டி சுந்தையா தெரிவித்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். அரிசிமூடைகளும் பொலிஸ்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யபடவிருப்பதாகவும், இம்மோசடி சம்பந்தமாக மேலும் விசாரணை நடைபெற்றுவருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (கொ)

## 2ம் பிரிவுச் சாம்பியன் போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்தும் உதைபந்தாட்ட 2ம் பிரிவுச் சாம்பியன்போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பில் திரு. ரெக்ஸ் ரேய்மன்ட் தலைமைதாங்குகிறார். மானிப்பாய் இந்துக்கல்லூரி இதுவரை பங்குபற்றிய போட்டிகளில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது

## ஆசிரியர்-..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும், 96 ஜி. சி. ஈ. (உயர்) ஆசிரியர்களும் உள்ளனர்.

### 35,691 ஆசிரியர் தேவை

நாடு முழுவதிலும் 35,691 பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியர்கள் தேவை. 34,803 ஆசிரியர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர்

8,502 பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் தேவை. இதே வேளையில் 8,251 ஆசிரியர்களே சேவையில் உள்ளனர்.

விரைவில் 40 ஆயிரம் விஞ்ஞான ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழகம் ஒன்றில் பயிற்சி அளிக்கும் அவசரத் திட்டம் ஒன்று அமுல்செய்யப்படும் என்றும் கல்வியமைச்சர் கூறினார். (ம-இ)

WANTED

Leading Engineering Establishment in Jaffna requires the services of experienced Welder Cum Fitters Latheman Electricians for Motor re-winding with knowledge of Radio repairing. Salary negotiable. Apply with testimonials:- Advt. No: 7490 C/o EELANADU, JAFFNA.
749

பயிற்சி

கென்டன் மாஸ்ரர் லேணர்ஸ் 129, பிரதான வீதி, யாழ்ப்பாணம். நத்தார் புதுவருட காலத்தில் அளிக்கும் சலுகை. குறைந்த சலாரில் வாகன சாரதிகளுக்கு தேர்ச்சிபெற்ற சாஸ்திரமுறை அறிந்தவர் கொடுக்கும் பயிற்சி பதிவு செய்யப்பட்ட மோட்டார் பயிற்சிப் பாடசாலை. தொலைபேசி: 7795. (7488)

22 ஸ்ரீ 589 ஒஸ்ரின் லொறி விற்பனைக்கு

இதற்கான கேள்விப்பத்திரங்கள் 5-12-1980ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

சட்ட அதிகாரி,

த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,

TFC

249/C, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7680.

## செய்தியில் திருத்தம்

நேற்றைய ஈழநாடு இதழில் ஏழாம் பக்கத்தில் வெளியான பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் கொலைமுக்கு செய்தியில் 2ந் எதிரியின் மனைவிக்குச் சாட்சியமளிக்க அனுமதி மறுப்பு என்றிருப்பது தவறானதாகும். அதனை 1ம் எதிரியின் மனைவிக்கு என்று திருத்தி வாசிக்கவும். இத்தவறுக்காக வருந்துகிறோம். (ஆ-ர்)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper ... Post Office Sri Lanka ... No. ... 8548/78 The Eelanadu ... P. No 4. ... வீதி, 65-ம் இலக்க ... நவம்பர் 30 ம் திகதி ... Grams Eelanadu, Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org